www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர் – 22

Chanchive

22-Udgave




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர் - 22
தை - மாசி 1993

| பக்கம் | உள்ளடக்கம் |
|---|---|
| 3. | நோக்கு |
| 8. | அன்பான வாசகர்களுக்கு |
| 9. | நோபல் பரிசு (கட்டுரை) |
| 12. | கடிதங்கள் |
| 17. | பேரு (கட்டுரை) |
| 24. | மீராவின் தொடர்நவீனம் |
| 28. | யார்தலைவர்? (கவிதை) |
| 29. | விட்டு விடுதலையாகி (கதை) |
| 37. | குறுக்கெழுத்துப்போட்டி 19 |
| 40. | சுற்றுக் கண்ணோட்டமும் (கட்டுரை) |
| 45. | நினைவில் ஒன்றும் பக்கம் (கவிதை) |
| 46 | ஹோராமா (கதை) |
| 51. | கம்யூனிசத்திற்கு சாவுமணி (கட்டுரை) |

அட்டைப்பட விளக்கம்:
பட்டினிக் கொலைச் சிறைக்குள்
பதுங்குகின்ற மாணவர்க்கு
இச் சஞ்சீவி சமர்ப்பணம்....

சஞ்சீவியின் தொடர்புகளுக்கு: Chanchive
Danmarksgade 10
7500-Holstebro.D.K

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

எமது தாயகத்தினை விட்டு அகதிகளாக மக்கள் புலம்பெயர்ந்து வருவதுடன். நாம் புலம் பெயர்ந்ததற்கான காரணங்கள் பலவுமுள்ளன. இந்த புலம் பெயர்வுகளுக்கான காரணிகள் பற்றி இங்கு நாம் அதிகம் விளக்கத் தேவையில்லையென நினைக்கின்றோம். இது பற்றிய சுயவிளக்கங்கள் புலம்பெயர்ந்தோருக்கும், தாயகமண்ணில் இன்றுவரை தமது உயிரை நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் பாதுகாத்து வரும் மக்களுக்கும் புரிந்ததே. இப் புலம் பெயர்வுகளுக்கான காரணங்களை இன்றுவரை புரியாதிருப்போர்கள் தம்மை இழந்தவர்களாகவே கணிக்கப்பட வேண்டியவர்கள்.

இந்த வகையில் அகதிகளாக புலம்பெயர்ந்து ஐரோப்பிய மண்ணுக்குள், பல இறுக்கமான தடைகளையும் தாண்டி வந்து, தாம் அகதிகள் என்பதற்கான காரணங்களை முன்வைத்து, அகதி முகாங்களில் முடங்கிக்கிடந்தவண்ணம், இந்த ஐரோப்பிய நாட்டு அரசுகளின் நல்ல முடிவுகளை எதிர்பார்த்திருப்போர் ஆயிரக்கணக்காக உள்ளனர். இப்படி அனாதரவாய்ப் போன நிலையில் உள்ளவர்களுக்கு இந்தக் கபடம் நிறைந்த அரசுகள் தரும் பதில்கள், கூடுதலானோருக்கு அதிருப்தியையே தருவனவாக உள்ளது. மேலும் **உளவியல்** ரீதியான பாதிப்புகளையும் கூட்டியுள்ளன.

மேற்குறிப்பிட்ட நிலைமையில் வாழ்வோரில், 300-400 வரையான தமிழர்கள் டென்மார்க்கின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாங்களில் முடங்கிக்கிடந்து தமக்கு ஆரோக்கியமான பதில் கிடைக்குமென கனவு கண்டு வருபவர்கள். இவர்களில் 90% ஆனோர் இங்கு வதிவிட உரிமை மறுக்கப்பட்டோராவர். (இவர்கள் 2½ வருடம் முதல் இந்நாள் வரை இந்த நாட்டுக்கு வந்தவர்கள்.) எமது தாயகமண்ணில் நடக்கும் பயங்கர அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள் மத்தியிலிருந்தும் தம்மை மீட்டு இங்கு வந்தவர்களுள்பலர் உள்ளனர் என்பது குறிப்பிடப்பட வேண்டியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இப்படியான ஒரு நிலைமையில் டென்மார்க் அரசானது, கொழும்பிலே அமைதி நிலவுகின்றது அங்கே போய் வாழலாம் என்ற ஒரு காரணத்தையும் காட்டி, இன்னும் ஒருசிலருக்கு எதுவித சம்பந்தமும் இல்லாத காரணங்களையும் காண்பித்து திருப்பி அனுப்ப முனைகின்றது. உ+ம்: கத்தோலிக்க மதத்தைசார்ந்த ஒருவருக்கு; அரசாங்கத்தால் அனுமதி மறுத்து தெரிந்த கடிதத்தில் கூறப்பட்ட காரணம்: "ஜிகாத்" என்ற முஸ்லீம் அமைப்பில் இருந்தவர் என்பதாகும்.

இலங்கை ஒரு உல்லாசப் பிரயாணிகளுக்கு உகந்த - சொர்க்க பூமி என விளம்பரம் செய்யும் செய்தித் தொடர்பு சாதனங்கள், இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் தமிழர்களையும், அவர்கள் பற்றிய பிரச்சனைகளையும், டெனிஸ் மக்களுக்கு ஓரளவு தெரியப்படுத்தியிருப்பதோடு; இலங்கையில் பிரச்சனைகள் நடக்கும் போது அது பற்றி செய்தி வெளியிடாத மக்கள் தொடர்பு சாதனங்கள், இந்த உண்ணாவிரதப் போராட்டத்தையும் காண்பித்து, 1992 டிசம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்றிருந்த சம்பவங்களின் தொகுப்பினையும் காண்பித்தமை குறிப்பிட வேண்டியது.

தொலைக்காட்சி மூலம் இந்த போராட்டம் பற்றி காண்பிக்கப் பட்ட போதுதான், டென்மார்க் வாழ் தமிழ் மக்களுக்கும் ஓரளவு தெரிய வந்தது. இச் செய்தி அறிந்தவுடன் நாமும் அங்கு விரைந்து போனோம், சந்தித்தோம்..... இதே வேளையில், உண்ணாவிரதப் போராட்டத்தை "CD" (CENTRUM DEMOKRATI) அரசியற் கட்சித் தலைவி MIMI JACOBSEN தலையிட்டு SANDHOLM ல், உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. இச் செய்தி பரப்பப்பட்டு KARUP இலும், 18.1.1993 இரவு $01^{00}$ மணியளவில் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த "சாகும் வரை" உண்ணாவிரதம் தொடர்ந்து நீடித்திருந்தால், அல்லது இவர்களை இரவோடு இரவாக திருப்பி அனுப்பப் பட்டிருந்தால், நாம் யார்தான் பொங்கி எழுந்து

www.tamilarangam.net

எதையாவது சாதித்திருக்க முடியுமா? இல்லை... ஏன்... ஏனென்றால் டென்மார்க்கிலும், தமிழ் மக்கள் அகதி கோரிய நாடுகள் எங்குமே, தமிழர்களுக்குரிய பொதுப்பிரச்சனைகளைப் பொது-மைப்படுத்தி சொல்லக்கூடிய பொதுஸ்தாபனம்-அமைப்பு இன்றுவரை இல்லை. ஆனால் டென்மார்க்கில் வேறு இன மக்களுக்கென பொதுநிலையான ஸ்தாபனங்கள்-அமைப்புகள் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட பிரச்சனைகள் சார்பாக சஞ்சீவியின் 15வது வெளியீட்டின் 7வது பக்கத்தில்:

"இப்படியாக அகதிகளின் குரலைப் பிரதிபலிக்கக் கூடிய ஓர் அமைப்பின் அவசியத்தை மேற்கத்திய நாடுகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும், அறிஞர்களும் கருத்திற் கொள்ள வேண்டியது காலத்தின் அவசியமாகும். நாம் பல்வேறுபட்ட அரசியல் கருத்துகளைக் கொண்டவராயினும், நாம் யாவரும் 'அகதிகளாக்கப் பட்டவர்கள்' என்பதில் ஒற்றுமை உள்ள பட்சத்தில் இதனைச் சற்று தீவிரமாக சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே இதனை ஒரு முக்கிய பிரச்சனையாகக் கருத்திற் கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு வர வாசகர்களின் கருத்துக்களை அறிய விரும்புகிறோம்." என்று குறிப்பிட்டிருந்தோம், இது பற்றி எவருமே அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இதைப் புறக்கணித்து விட்டு சாதாரணமாக நாம் நகர்ந்து விடலாம் ஆனால் நிலைமை அப்படியல்ல.

ஆகவே ஒரு சிலராவது இது பற்றிச் சிந்தித்து ஆக்கபூர்வமான செயற்பாட்டில் ஈடுபட வேண்டுமென எல்லோரையும் வலியுறுத்துகின்றோம்.

— சஞ்சீவி

www.tamilarangam.net

அன்பான வாசகர்கட்கு,

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் எதிர்ப்புக்குரல் கொடுத்துப் போராடவும், உரிமைகளை பாதுகாப்பதற்கும் - என ஓர் தீர்க்கமான அமைப்பு எமது மக்களுக்கென்றும் இன்றுவரை இல்லாதிருந்த போதும், சஞ்சீவியானது தன்னாலியன்றளவு இதற்காகக் குரல் கொடுத்தும், கருத்துக்கள் தெரிவித்தும் வருவது யாவரும் அறிந்ததே.

கடந்த சில காலங்களாகச் சஞ்சீவி தாமதித்து வெளிவருவதும், ஆண்டுக்கான எண்ணிக்கை விகிதம் குறைந்து வருவதும் நிதி நெருக்கடியின் விளைவே.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளின்பால் அக்கறையுள்ளவர்களும், அபிமானிகளுமான உங்களிடமிருந்து சஞ்சீவி தொடர்ந்தும் சிறப்புற வெளிவர, உங்களால் இயன்ற நிதியுதவியை எதிர்பார்க்கின்றது.

நீங்கள் வங்கி மூலம் நிதியனுப்ப வேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்:

A/C NO: 7601-408876-9

VESTJYSK BANK
7500 HOLSTEBRO

மேலதிக தொடர்புகளுக்கு
CHANCHIVE
DENMARKSGADE-10
7500 HOLSTEBRO -(DENMARK)

ஆசிரியர் குழு.

www.tamilarangam.net

# "நோபல் பரிசு" தலைமறைவில்....

-தங்கரூபன்



இவ்வருட நொபல்பரிசு மனித உரிமைக்காகப் போராடிய குவாட்டமாலாவைச் சேர்ந்த பெண் போராளியான ரிகோபெடா மஞ்சு (RIGO BERTA MENCHU TUM) என்பவருக்குக் கிடைத்துள்ளது. இவர் குவாட்டமாலாவின் பூர்வீகக்குடி இனத்தைச் சேர்ந்தவர்.

மத்திய அமெரிக்காவிலுள்ள நாடான குவாட்டமாலா பல பத்து ஆண்டுகளாக மாறி, மாறி வந்த இராணுவ ஆட்சியாளர்களின் கொடுமைகளுக்குப் பெயர் போன நாடு. அங்கு வாழும் சனத்தொகையில் 2/3 பங்கினர் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்கள். இவர்கள் ஸ்பானிய, வெள்ளை ஆதிக்கத்திற்கும், கொடுமைகளுக்கும் எதிராகப் போராடி வருகின்றனர். பூர்வீகக் குடிகள் தங்கள் நிலம், கலாச்சாரம், மொழி ஆகியவற்றிற்கு உரிமை வேண்டி நடாத்தும் போர் ராணுவ ஆட்சியினால் கொடிய முறையில் நசுக்கப்பட்டு வருகின்றது. கடந்த 30 வருடங்களாக இப்போர் குறிப்பிடக் கூடியளவிற்கு உக்கிரமடைந்துள்ளது. 30 வருட உரிமைப் போரில் 1,66,000 மக்கள் இறந்துள்ளனர். 40,000 பேர்கள் » காணாமல் « போயுள்ளனர். ஒரு மில்லியன் மக்கள் அகதிகளாக்கப்படுகின்றனர். கடந்த பத்து, பன்னிரண்டு ஆண்டுகளில் மாத்திரம் 2000 பேர்கள் » காணாமல் « போயுள்ளனர்.

1986 லிருந்து "பாராளுமன்ற ஜனநாயக அரசு" என அறிவிக்கப்பட்ட போதிலும், பெரு நிலச்சுவாந்தர்களும், ராணுவமுமே ஆட்சியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக அந்த குவாட்டமாலாவை "வசந்தத்தின் நாடு" என்று புனைப்பெயர் சூட்டியுள்ளது. இதையே வேறு வார்த்தையில் சொன்னால் "கொலைகளின் நாடு", அல்லது "விதவைகளின் நாடு" என்று அழைப்பதே பொருத்தமாகும். கணவன்மாரை இழந்த விதவைகள், பிள்ளைகள் அன்றாட வாழ்க்கை நடாத்த படும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. குடும்பப் பொறுப்பைத் தனியே சுமக்க முடியாத விதவைகள் தங்கள் குழந்தைகளையும் 4 அல்லது 5 வயதிலேயே வேலைக்கு அனுப்புகின்றனர். விறகு வெட்டி விற்பது குழந்தைகளின் தொழில். பல குழந்தைகள் குடும்பப் பாரத்தைச் சுமக்க முடியாமல் அனாதையாக பிச்சை எடுக்கின்றனர். இதனால் "வீதிக் குழந்தைகள்" பெருகி வருகின்றது. இக் குழந்தைகள் கொலைகளுக்குள்ளாக்கப்படுவது உலகறிந்த விடயம். இப்பிரச்சனைகளைக் கூட அவர்களுக்கு எதிரான நெருக்குதலையென்றே அந்நாட்டு மக்கள் கருதுகின்றனர். இக் கொடுமைகளின் பின்னணியிலேயே றிகோபெட்டா மெஞ்சுவிற்கு நோபல் பரிசு கிடைத்துள்ளது. இப் பரிசு 10.12.1992 ல் ஒஸ்லோவில் (oslo) வழங்கப்பட்டது.

33 வயதான றிகோபெட்டா மெஞ்சு தனது குடும்பத்தில் பெரும்பான்மையினரை இழந்தவர். இவரின் தந்தையார் (VICENT MENCHU) விவசாய இயக்கத்தின் தலைவராக இருந்தவர். இவர் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டார். தாயார் கற்பழிக்கப்பட்டும், சகோதரர்கள் மூவரில் இருவர் அடிமை வாழ்க்கையான 'பருத்தித் தோட்டத்தில்' வேலை பார்த்த போது நஞ்சு வீசி இறந்தனர். கடைசிச் சகோதரர் இராணுவ சித்திரவதையால் மாண்டார்.

1981 லிருந்து புலம் பெயர்ந்து, மெக்சிக்கோவில் தலைமறைவு வாழ்க்கையை ஆரம்பித்தார் மெஞ்சு. அங்கிருந்து தனது நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் உழைத்து வருகிறார். நோபல் பரிசு கிடைத்த செய்தி பற்றி அறிந்ததும் முதன் முதலில் குவாட்டமாலாவின் விதவைகள் அமைப்புடனேயே (CONAVIGUA) தொடர்பு கொண்டார். இவர் பூர்வீகப் பெண்களின் 500 வருட அன்னிய அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்பிற்கும் எதிரான போரின் 'சின்னமாக'க் கருதப்படுகின்றார். நோபல் பரிசு கிடைத்ததும் மெஞ்சு கூறிய முதல் வார்த்தை கவனிக்கத் தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## »அவர்கள் எங்களுக்கு நோபல்பரிசு தந்துள்ளார்கள்!«
## ஆனால், »நாங்கள்« யார்?

16.12.1992ல் டென்மார்க் விஜயம் செய்து, பத்திரிகையாளர்களுடன் உரையாடுகையில் நோபல்பரிசு தனக்குக் கிடைத்ததை தனிப்பட்ட பெருமையாகக் கருதாமல், தனது மக்களின்து பிரச்சனையை உலகம் முழுவதும் எடுத்துச்செல்லும் விளம்பரமாகவே கருதுவது கவனிக்கத் தக்கது. பத்திரிகையாளர்களிடம் மேலும் "இப்பரிசு ஆகாயத்திலிருந்து அதிசயமாக விழவில்லை. எத்தனையோ மனிதர்களின் கூடும் உழைப்பே இதற்குக் காரணம்" என்றார். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1993ம் ஆண்டை "பூர்வகுடிகளின் ஆண்டாக" அறிவித்துள்ளமையையிட்டு "ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இப்பிரச்சனையில் பாரிய அக்கறை காட்டவில்லை எனவும் ஐரோப்பிய நாடுகள் »அசாத்தியமான பொறுமையை« சர்வாதிகார, ராணுவ ஆட்சிகள் மீது கடைப்பிடித்தமையே இப்பிரச்சனைகளுக்கு காரணம், இதற்காக ஐரோப்பிய மக்கள் வெட்கித்தலைகுனிய வேண்டும்" என்று கூறியது மனம் கொள்ளத்தக்கது.



விதவைகள்: எதிர்காலம்..?

நோபல்பரிசால் மாத்திரம் இப்பிரச்சனைக்களைத் தீர்க்க முடியாது என்பதில் மெஞ்சு உறுதியாக இருக்கின்றார். மனித உரிமைகளை உலகெங்கும் காலில் போட்டு மிதித்துக் கொண்டே, அதற்கெதிராகப் போராடுபவர்களை பரிசு கொடுத்து, சாந்தப்படுத்தித்திசை திருப்பி வருகின்றனர்.

மெஞ்சு போன்ற உறுதியாகப் போராடக் கூடிய சக்திகளுக்கு நாம் அதற்குரிய முக்கியத்துவம் கொடுப்பதுடன், அதற்கு ஆதரவாகவும் குரல் கொடுக்க வேண்டும்.

———x———x———



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடிதங்கள்

அன்புக்கினிய 'சஞ்சீவி' நண்பர்கள் அனைவர்க்கும்!

நீங்கள் அனுப்பிய சஞ்சீவி இதழ்கள் இரண்டும் கிடைத்தன. நன்றி. மகிழ்ச்சியுடனும் உங்களுக்கு எமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். சஞ்சீவி கண்டு பெருமையடைகிறேன்.

சஞ்சீவியில் நீங்கள் சொல்லவிளையும் கருத்துக்கள் இன்றைய நிலையில் எமக்கு சஞ்சீவி போலவேயுள்ளது. அன்றும் இராம, ராவண யுத்தத்தில் மயங்கிய இலக்குவணை மீட்டெடுக்க இராமனுக்குச் சஞ்சீவிதான் தேவைப்பட்டது. இன்றும், மயங்கியும் மயங்காமலும், மயக்க நிலைக்குப் போகும் இலக்குவணர்களை மீட்க இச் சஞ்சீவி நிச்சயமாக உதவும். அதனால்தான் உங்கள் சஞ்சிகையும் சஞ்சீவி எனப் பெயர் கொண்டதோ?

எழுத்தாளர்களின் ஆற்றல்கள், அவர்கள் எ.ழுத்தில் இன்று இருக்க முடியாத சுருதி படைத்திருப்பதைக் காட்டுகிறது, இப்படி எத்தனை பேர் எத்தனை நாடுகளில் இன்றும் தமது ஆற்றலைப் பயந்து, பயந்து வெளிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ளனர். நண்பர்களே அங்கு வாய்மூடியிருக்கும் எம்மின இளைஞர்களும், யுவதிகளும், குழந்தைகளும் உங்களிடம் மௌனத்தின் மூலம் கேட்பதெல்லாம் உங்கள் வாயையும் மூடிவிடாதீர்கள் என்பதே. உங்கள் இப்பணி தொடரட்டும் சஞ்சீவியின் அடுத்த எழிற் கோலத்திற்காக காத்திருக்கிறேன்.

வாழ்க. சஞ்சீவி.

அன்புடன்
ஜெயம்
(கனடா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு,

வணக்கம். கடைசி இதழ் கிடைத்தது. ஐரோப்பா வாழ்க்கை நெருக்கடிகளிலும் இப்படியான சஞ்சிகைகள் வெளிவருவது பாராட்டுதற்குரியது. கடிதம் எழுதத்தூண்டியது திரு. செல்வா-சின்னத்தம்பி எழுதிய கடிதமே.

இவர் இவ்விதழில் எழுதிய கடிதம் மூலம் தன்னை ஒரு புலி ஆதரவாளன் என்று நிரூபித்துவிட்டார். இதுவரை காலமும் தன்னை ஓர் ஜனநாயகவாதி என்றே காட்டி வந்தார். தற்போது புலிகளுக்கு நன்றாக பரிந்துரை அல்லது வக்காலத்து வாங்கியுள்ளார்.

தமிழ் இயக்கங்கள் பற்றி சொல்லமுனைந்த இவர் புலிகள் தான் இயங்கினார், மற்றவர்கள் உறங்கினார் என்ற கருத்துப்பட எழுதியுள்ளமை முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதாகும். இவரைப்போல் பலர் வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்து வருகின்றார்கள். சாவகச்சேரி பொலீஸ் நிலைய தாக்குதல் தமிழீழப் போராட்டத்தில் குறிப்பிடக்கூடிய ஓர் நிகழ்வு. இதை TELO அமைப்பினர் செய்தனர். EPRLF, TELO, EROS போன்ற அமைப்புக்கள் குறிப்பிடக்கூடியளவு செயலில் இறங்கின என்பது எல்லோரும் அறிந்த விடயம். மற்றைய அமைப்புக்கள் மீது புலிகளுக்கு எப்போதும் காழ்ப்புணர்வு இருந்தது. அதன் விளைவாகவே அவர்களைப் (TELO, EPRLF) படுகொலை செய்தது. புலிகளுக்கும், ஏனைய இயக்கங்களிற்கும் கொள்கை வேறுபாடு ஏதுமில்லை. ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். மாற்று இயக்கங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கிறதைக் காண சகிக்க முடியாத புலிகள் அவர்களை உயிருடன் கொளுத்திய சம்பவங்களைத் தமிழ் மக்கள் மறந்துவிட முடியுமா? இது திரு செல்வாவின் ஆழ்ந்த ஆய்வுக்கு எட்டவில்லை. இவர் போன்றவர்கள் தான் நாளைய தமிழீழச் சரித்திரத்தை எழுதவுள்ளனர். எமது சரித்திரம் எப்படியிருக்கும் என்பதை வாசகர்கள் ஒரு கணம் யோசித்தால் புரியும். அக்கொலைகளில் வட பகுதியைச் சேராத இளைஞர்கள் பலியாகினர் என்பதால் இலகுவில் மறந்துவிட முடியுமா?

செல்வா கூற முனைவது போல புலிகள் உத்தம புத்திரர்கள் அல்ல, பத்தரை மாற்றுத் தங்கமும் அல்ல. தமது நலனுக்காக யாருடனும் உறவு வைத்துக் கொள்ளக் கூடிய ஓர் வெறிபிடித்த கும்பலே புலிகளின் தலைமை. 'புலிகளைத் திருத்தலாம்' என எண்ணுபவர்கள் ஏன் தான்

www.tamilarangam.net

வெளிநாடுகளில் வாழ்கின்றார்களோ தெரியவில்லை. இங்கே சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, உழைப்பில் சொற்ப பணத்தை புலிகளுக்குக் கொடுத்துவிட்டு, "விடுதலை"ப்பாசாங்கு செய்துவருகின்றீர்கள். ஆடம்பர வாழ்க்கை வாழும் இவர்கள் இவற்றை ஒதுக்கி விட்டு இலங்கை (யாழ்ப்பாணம்) சென்று புலிகளுடன் இணைந்து போராடலாமே! 10-12 வயதுச் சிறார்கள் போரில் மடிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது வெளிநாட்டில் வாழும் புலி ஆதரவாளர்களுக்குத் தெரியும். இந்த வீரத்தமிழர்கள் போனால் புலிகளுக்கு இன்னும் பலமாக இருக்குமே.

மக்களை நேசித்த, ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகப் போராடக்கூடிய சில புரட்சிகர இயக்கங்களையும் புலிகள் கொலை செய்தனர். இவ்வமைப்புகள் புலிகளைத் தேசிய சக்தியாக ஏற்றன என்பது தெரிந்தும் கொலைகள் செய்யப்பட்டன. இவை திரு. செல்வாவுக்கு தெரியாதா?

யாழ் மண்ணில் பாரம்பரியமாக வாழ்ந்த முஸ்லீம் மக்கள் புலிக் காட்டுமிராண்டிகளால் அடித்து வெளியேற்றப்பட்டதை செல்வா வசதியாக விட்டுவிட்டார். இது நாசிகள் செய்த செயல்களுக்கு ஒப்பானதாகும். ஆகவே புலிகளுக்கு வக்காலத்து வாங்குபவர்களைப் பற்றி சஞ்சிகை அவதானமாக இருக்க வேண்டும். இன உணர்வு, மொழியுணர்வு உள்ள தமிழர்கள் முஸ்லீம் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும்.

புலிகளைத் திருத்தும் வேலை சஞ்சிகைக்குத் தேவையில்லை. இப்பாரிய பொறுப்பை திரு. செல்வாவும், அவரைப் போன்ற புலிகளைத் திருத்தலாம் என்று எண்ணும் வைத்தியகாரர்களும் முன் நின்று செய்யட்டும்.

மற்றும், மீராவின் பாணி சுவையாகவும், நல்ல கருத்துக்களையும் கொண்டுள்ளது. பாராட்டுக்கள்.

யோகன்.
ஜேர்மனி.

www.tamilarangam.net

நட்புடன் சஞ்சீவிக்கு,

தங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அனைத்து இதழ்களையும் வாசித்தேன். ஆரம்பமுதல் ஒவ்வொன்றிலும் வளர்ச்சி தெரிகிறது. குறிப்பாக 12வது இதழிலிருந்து புதுக்கருத்துக்களுடன், புதிய சிந்தனையுடன் சஞ்சீவி வெளிவருவது காணக்கூடியதாகவிருக்கின்றது. என் சிற்றறிவைக் கொண்டு சஞ்சீவியின் பக்கங்களைப் படித்து இலகுவில் புரிந்து கொண்டேன். ஆனால் ஒவ்வொன்றையும் விமர்சிக்கும் அறிவு, வளர்ச்சி, தெளிவு எனக்கில்லை. ஆனாலும் தத்துவம், புரட்சி, இலக்கியம், பெண்நிலைவாதம், சமூக விஞ்ஞானக் கண்ணோட்டம் என்ற அடிப்படைகளை வைத்துக் கொண்டு பல சஞ்சிகைகள், புலம்பெயர்ந்த நாடுகளில் வெளிவருகின்றன. இவைகளில் பெரும்பாலானவைகளில் வரும் ஆக்கங்களை என்போன்ற பெரும்பாலான வாசகர்களினால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

நாட்டில் பத்தாம் வகுப்பு படித்துவிட்டு, ஏஜன்சிக்குக் காசு கட்டி நாயாக அலைந்து, அகதியாக இங்கு புகலிடம் கோரியவனுக்கு அல்லது இயக்கத்திற்குப் பின்னால் ஏன் அலைகின்றோம், எதற்கு துவக்கு வைத்திருக்கிறோம் என்ற விடயமே விளங்காமல், அலங்கோலப்பட்டு உயிரைக்காக்க இங்கே ஓடி வந்தவர்களுக்கு, "அன்னிய தேசத்தின் இயந்திர வாழ்க்கையின் நடுவில், மேதாவித்தனமான, பொருள்முதல்வாத ஆய்வுகளும், கலை கலைக்காகவா?, இல்லை மக்களுக்காகவா? என்ற தலைகனத்த விவாதக்கட்டுரைகள் எங்கே விளங்கப் போகிறது?"

இதற்கெல்லாம் விதிவிலக்காக, மேற்கூறியவைகளிலிருந்து வேறுபட்டு மேதாவித்தனமான சிதம்பர சக்கரங்களுக்கு நடுவில் "சஞ்சீவி" இலகுவான முறையில், தெளிவான நடையில் புதுக்கருத்துக்களை "ஜனரஞ்சகமாக" அனைவரும் விளங்கும் வகையில் மலர்வது என் போன்றவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

சஞ்சீவியின் பணிதொடர என் வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகுக.

நன்றி

நட்புடன்
சிபூட்டன்
(நோர்வே)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிப்பிற்குரிய ஆசிரியர் குழுவினருக்கு,

மலர் 21 கையில் கிடைத்தது. சேயின் அட்டைப்படமும், ஆதவனின் கவிதைக்கான ஓவியமும் அற்புதம். ஓவியர் சௌந்தருக்கு என் இதயபூர்வமான பாராட்டுக்கள். தமயந்தியின் சிறுகதையில் வேகம் இருக்கிறது. அதன் முடிவை மட்டும் ஏற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கிறது. காரணம் அது எந்த அளவுக்கு நடைமுறையுடன் பொருந்தி வரக் கூடியது? மேலும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களை எதிரிகளாக நினைப்பது முற்போக்குத்தனமான ஒன்றாக கருதப்படக் கூடியதா? அவ்வாறு எனில் கருத்துப்பரிமாறல், தெளிவுபடுத்தல் ஆகியவற்றிற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

நீண்ட காலம் அடைக்கப்பட்டு, திறந்து விடப்பட்ட வெள்ளம் மாதிரி மீராவின் வார்த்தைகள் உத்வேகத்துடன் வெளி வந்து இருக்கிறது. உள்ளத்திற்குள் உள்ளடங்கி இருக்கும் உணர்வுகளை எல்லாம் பொருத்தமான வார்த்தை வடிவங்களில் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார்.

"கம்யூனிசத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டு விட்டதா"? என்ற தொடர்கட்டுரை நாஜிக்களின் ஆக்கிரமிப்பு முயற்சிகளையும் சோவியத் யூனியனின் தற்காப்பு முயற்சிகளையும் கண்முன்னே எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது. அடுத்த பகுதியினை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

மொத்தத்தில் சஞ்சிகையில் பல முன்னேற்றங்களை அவதானிக்க முடிகிறது. முழுக்க முழுக்க அரசியல் கருத்துக்களை தாங்கி வரும் ஆக்கங்களுக்கு மட்டும் இடமளிக்காமல், சமூக, விஞ்ஞான, கலாசார விடயங்கள் தொடர்பான ஆக்கங்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தால் சஞ்சிகை தன்னுடைய வாசகர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும் என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

அன்புடன்

நடா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேரு: கெரில்லா தலைவர் குஸ்மான் கைது!

- தங்கரூபன் -

பேரு நாட்டைச் சேர்ந்த கெரில்லா அமைப்பின் தலைவரான **அபிமைல் குஸ்மான்** சென்ற வருடம் செப்டம்பர் மாதம் பேருவின் தலைநகரான லிமா (LIMA)வில், அவரது 7 முக்கிய தோழர்களுடன் கைது செய்யப்பட்டார். அரசுக்கு எதிரான ரகசிய கூட்டம் ஒன்றின் போதே கைது செய்யப்பட்டார். இக் கைது தொடர்பாக சகல பத்திரிகைகளும் செய்திகள் வெளியிட்டன. அவற்றில் பெரும்பான்மையான முதலாளித்துவப் பத்திரிகைகள் "பேரு நாட்டின் ஸ்டாலின் கைது", "மாஓவின் கண்மூடித்தனமான விசுவாசி கைது" என்றும், "லத்தீன் அமெரிக்காவின் இந்நூற்றாண்டுக் கைது" எனவும், "ஸ்டாலினிய மனநோயாளி கைது" என பலவகையில் அபிமைல் குஸ்மானின் (ABIMAEL GUZMAN) கைது பற்றி பரபரப்பாக எழுதின. இவ்வளவு தூரம் மாஓவையும், ஸ்டாலினையும் ஒப்பிட்டு ஒரு கெரில்லா தலைவரை வர்ணிக்க என்ன காரணம்? யார் இந்த குஸ்மான்?

ஆம், குஸ்மான்! இந்தப் பெயரைக் கேட்டாலே ஏகாதிபத்திய தாசர்களுக்கு உடல் நடுங்கும்.

இன்று உலகில் இருக்கும் மார்க்சிய - லெனினிய - மாஓ சிந்தனைவாத கெரில்லா அமைப்புகளில் பலம் வாய்ந்ததாக விளங்கும் "ஒளிரும் பாதை"யின் (SHINNING PATH) தலைவர் தான் அபிமைல் குஸ்மான். இது 'உண்மையில் பேருவின் மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்ட் கட்சியாகும். பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியாக கடமையாற்றிய இவர் 1970 களில் "ஒளிரும் பாதை" அமைப்பை தனது ஆதரவாளர்களுடன், ரஷ்ய திரிபுவாதிகளிடமிருந்து பிரிந்து கட்டியெழுப்பினார். பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய போதே மாணவர்களைக் கட்சிப் பணிகளுக்கு ஊக்கமளித்து, கிராமங்களுக்கு சேவை செய்ய அனுப்பி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பத்திரிகையாளர்கள் முன்னிலையில்: குஸ்மான் கம்பிக் கூட்டுக்குள்ளிருந்து கூறிய காட்சி.

அதன்மூலம் ஏழை விவசாயிகளின் ஆதரவைக் கட்சிக்குத் தேடிக் கொடுத்தார். பேரு கம்யூனிஸ்ட் கட்சிக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கைக் கண்டு அரசு சீற்றமடைந்தது. அதி விசேட சட்டங்கள் போட்டு விவசாயிகளையும், கெரில்லா இளைஞர்களையும் கொடுமைக்குள்ளாக்கியது பேரு அரசு. இக் கொடுமைகளுக்கு எதிராக செஞ்சேனைகள், விவசாயிகளின் ஆதரவுடன் அரசுக்கு எதிரான போராட்டம் 1980ல் ஆரம்பித்தது.

## பேரு பற்றிய சிறு விளக்கம்:

பேரு: தென் அமெரிக்காவில், மேற்குக் கரையோரம் பசுபிக் சமுத்திரத்தையும், வடக்கில் ஈக்குவடோர், கொலம்பியாவையும், தெற்கில் சிலியையும் எல்லைகளாகக் கொண்டநாடு. இங்கு வாழும் 22 மில்லியன் சனத்தொகையில் 14 மில்லியன் மக்கள் வறுமையில் வாடுகின்றனர். சமீப காலங்களில் கொலரா, மலேரியா போன்ற நோய்கள் பெரும் நாசம் விளைவிக்கின்றன. 50 – 60 மில்லியன் டொலரை வருடாந்த வெளிநாட்டு கடனாக செலுத்தி வருகிறது அரசு. சமீபத்திய ஆய்வுகள் கைத்தொழில் துறையில் 7 வீதத்தினரே பங்கு கொள்வதாகக் கூறு-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றன. அதனால் போதை மருந்து கடத்தல், கறுப்புப் பொருளாதாரம் போன்றவை அதிகரித்துள்ளது. 1980களிலிருந்து புதிய தாராளவாத கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு, சிங்கப்பூர், தைவான், கொங்கொங் போன்ற நாடுகளிலிருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்நாட்டுப் பொருளாதாரம் நாசமடைந்து வருகிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ளது. 1980லிருந்து தொழிற்சாலைகளிலிருந்து 50 வீதமானோரை வேலைநீக்கம் செய்யப்பட்டதால் நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்தப் பின்னணிகளுடனேயே 'ஒளிரும் பாதை' ஆரம்பித்து வைத்த போர் ஆரம்பமாகியது. இவர்கள் சீனத்தலைவர் தோழர் மாஓசேதுங்கை தமது ஆதர்சபுருஷனாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சீனாவில் மாஓசேதுங்கின் மறைவைத் தொடர்ந்து, சீனாவில் டெங்சியாவோ பெங் ஆட்சியில் மாஓ சிந்தனைகள் ஓரங்கட்டப்பட்டதையடுத்து, உலகெங்குமுள்ள கம்யூனிஸ்டுக்கள் சர்வதேசரீதியில் பல கம்யூனிஸ்ட் (மார்க்சிய-லெனினிய-மாஓ சிந்தனைவாத) கட்சிகளை ஒன்றிணைத்து "சர்வதேச புரட்சிகர அமைப்பு" (INTERNATIONAL REVOLUTIONARY MOVEMENT) என்ற பெயரில் இயங்குகின்றனர். அவ்வமைப்பில் "ஒளிரும் பாதை"யினரும் அங்கம் வகிக்கின்றனர். தலைவர் மாஓவிற்கு பின் சீனாவை சீரழித்து, கம்யூனிச பாதைக்கு துரோகமிழைத்த டெங் கும்பலையும், அவர்களது ஆட்சிக் காலத்தில் பிரபல்யமான "மூன்று உலகக் கோட்பாட்"டையும் கடுமையாக விமர்சித்து, இது தலைவர் மாஓவை இழிவுபடுத்தும் செயல் என வர்ணிக்கின்றனர் இவ் ஒளிரும் பாதையினர். கலாச்சார புரட்சி காலத்தில் தலைமை தாங்கிய "நால்வர் குழு"வை தங்கள் அன்புக்குரியவர்கள் என்றும், அவர்கள் தான் மாஓ சிந்தனைவாதிகள் எனவும் கூறுகின்றார்கள்.

ஒளிரும் பாதையின் அமைப்பாளரான குஸ்மானை அவரது ஆதரவாளர்கள் "தோழர் கொன்சாலோ" (CONZALO) என செல்லமாக அழைக்கின்றனர். ஸ்பானிய வழித்தோன்றலான அரசுக்கு எதிராகப் போராடக்கூடிய செவ்விந்திய அரசனான "இன்கா" (INCA) வாகவும், தங்களது நாட்டை விடுவிக்கும் புரட்சியாளனாகவும் தோழர் குஸ்மானைப் பற்றி அன்டீஸ் மலையில் வாழும் செவ்விந்திய மக்கள் கருதுவதாகவும் செய்திகள் வெளியாகின.

www.tamilarangam.net

10,000 பயிற்றப்பட்ட கெரில்லா வீரர்களையும், அவர்களைவிட 4-5 மடங்கு அதிகமான இயங்கக்கூடிய ஆதரவாளர்களையும், பல லட்சம் ஏழை தொழிலாள, விவசாயிகளையும் ஆதரவாளராகக் கொண்டுள்ளனர் ஒளிரும் பாதையினர். நகரங்களிலுள்ள சேரிப் பகுதிகளிலும் இவர்களுக்கு செல்வாக்கு அதிகம். சமீபத்திய ஆய்வுகள் தலைநகரான லிமா சேரிப் பகுதிகளிலும் இவர்களது செல்வாக்கு அதிகரித்துள்ளது என கூறுகின்றன. பேருவின் தெற்குப் பகுதி, அண்டீஸ் மலைப்பகுதி, கரையோரப் பகுதிகளில் சிலவும் ஒளிரும் பாதையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அரசுக்கும், கெரில்லாக்களுக்கும் நடைபெற்ற போரில் 26,000 பேர்கள் மாண்டனர். இவர்களில் பெரும்பான்மையினர் அரசபடைகளால் கொல்லப்பட்டனர். இவை பலமுறை சர்வதேச ரீதியில் அம்பலமானது. கெரில்லாக்களின் புகலை மறைக்க, அவர்கள் மீதுள்ள வெறுப்பினால் நிராயுதபாணியான, அப்பாவிப் பொதுமக்களை ராணுவத்தினர் கொன்று குவித்தனர். 1986ம் ஆண்டு EL FRONTEN தீவுச் சிறையிலும், 1992 மே மாதம் CANTO GRANDE சிறையிலும் நிராயுதபாணியான அரசியற் கைதிகள் (பெண் கைதிகள் உட்பட) 150 பேர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

பேருவில் மரண தண்டனை அமுலில் இல்லாத காரணத்தினால் தோழர் குஸ்மானை ஆயுள் தண்டனை தீவுச் சிறையில் தள்ளியுள்ளது பேருவிய அரசு. குஸ்மானை நீதியாக நடாத்தப்படவில்லை என சர்வதேச அமைப்புகள் அரசுக்கு எதிராக குரல் கொடுத்தன. சாதாரண கைதிக்கு கூட ஓர் வக்கீலுடன் கலந்துரையாட உரிமை உண்டு. ஆனால் குஸ்மான் தனது வக்கீலுடன் பேசுவதற்கு 5 நிமிடங்களே ஒதுக்கப்பட்டதும், அதுவும் காவலுடன் எனவும் செய்திகள் வெளியாகின. அவரது வழக்கைத் தொடர்பாகத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் முகமூடியணிந்து இருந்ததாலும், அவர்கள் யார் என அறிய முடியாமல் போனதுடன், வழக்கு மிக ரகசியமாக நடாத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.

'சர்வதேச சட்ட துறை நிபுணர்கள்' இவைகளைச் சேர்ந்த ஐந்து சட்ட நிபுணர்கள் குஸ்மான் அநீதியாக நடாத்தப்படுவதை கண்டித்து பேரு சென்று அரசுடன் பேச முயன்றனர். ஆனால் அவர்கள் திருப்பியனுப்பப்பட்டு விட்டனர். மேற்குறிப்பிட்ட சட்ட நிபுணர்கள் அமெரிக்காவைச் சேர்ந்த LEONARD WEINTGLASS, PETER ERLINDER, கனடாவைச் சேர்ந்த ANNE MARIE BLANCHET PARODI, ஜேர்மனியைச் சேர்ந்த MARTIN HEIMING ஆகியோரே. பேருவில் உண்மையில் பாசிச ஆட்சியே உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருவிய பாசிச அரசிற்கு உதவி என்ற பெயரிலும், 'கொக்கேயின் அழிப்பு' உதவி என்ற பெயரிலும் அமெரிக்கா ஆயுதம், பண உதவிகளைச் செய்து வருகிறது. ஒளிரும் பாதையினருக்கு எதிராக அமெரிக்கா பெருவின் ரகசிய பொலிஸிற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்கி ஒளிரும்பாதை கெரில்லாக்களை ஒழித்துக் கட்டுவதை மறைமுகமாக செய்து வருகிறது. வறுமை, வேலையின்மை போன்றவற்றால் 'காஸா கொக்கேன்' வியாபாரம் இன்று பெருவின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இதில் ராணுவம், பொலிஸ், அரசியல்வாதிகள் தாராளமாக ஈடுபடுவதால் அரசால் ஒன்றுமே செய்யமுடியாதுள்ளது. "கொக்கேயின் அழிப்புக்கு "உதவி" பெயரில் அமெரிக்கா வழங்கும் உதவி உண்மையில் பெருவைத் தமது (அமெரிக்காவின்) கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும், ஒளிரும் பாதையினரை ஒழித்துக்கட்டவுமே பயன்படுகிறது. சில வருடங்களின் முன்பு அமெரிக்கா ஒளிரும்பாதையினரை உளவுபார்க்கும் முயற்சியில் அனுப்பிய ஹெலிகப்டரை ஒளிரும் பாதை கெரில்லாக்கள் சுட்டு வீழ்த்தினர்.

கடந்த 12 வருடங்களாக நடைபெற்ற போரினால் பெருவின் பெரும் பகுதி அவசரகாலசட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கெரில்லாக்களின் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்பதே இதன் அர்த்தமாகும். வறுமை, வேலையின்மை, எதிர்கால நிச்சயமின்மை போன்றவற்றால் பெரும்பான்மையான மக்கள் தங்களை ஒளிரும் பாதையினருடன் சேர்ந்து போராடுவது சிறந்தது என எண்ணுகின்றார்களாம்.


1992ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் FUJIMORI என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார். இது லத்தீன் அமெரிக்காவில் பெருவை தனிமைப்படுத்தியது. அமெரிக்கா உத்தியோக பூர்வமாக 'வருத்தம்' தெரிவித்தது. ஆனால் நடைமுறையில் FUJIMORIக்குத் தேவையான சகலதையும், கொடுத்து வருகிறது. ராணுவ ஆட்சிகவிழ்ப்பிற்கு முன்பும் மனித உரிமைகளை மீறும் நாடுகளின் முன் வரிசையில் நிற்கும் நாடு தான் பெரு. தொடர்ந்து நான்கு, ஐந்து ஆண்டுகளாக இந்தித்தும் மனித உரிமைகளை மதிக்காத நாடென சர்வதேச மன்னிப்புசபை (AMNESTY INTERNATIONAL) AMERICAN WATCH போன்ற அமைப்புக்கள் பெருவை அம்பலப்படுத்தியுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பெரு அரசால் அவசரகால சட்டம் பிரயோகிக்கப்படும் பகுதிகள்.




ஒளிரும் பாதையின் தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும், அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட யுத்தத்தையும், அவர்களின் வளர்ச்சியையும் தடுத்துவிட முடியாது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். குஸ்மானையும், அவரது தோழர்களையும் கைது செய்த சிறப்புப்பொலீஸ் (DINCOTE) ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும் பயிற்சிகள் பெற்றவர்கள் என்பது குறிப்பிடக்கூடியது. ரஷ்யா, சீனா, அல்பேனியா, வடகொரியா போன்ற நாடுகள் கம்யூனிசத்திற்குத் துரோகம் இழைத்துள்ளார்கள் என ஒளிரும் பாதையினர் கருதுகின்றனர்.

குஸ்மானை மிருகம் ஒன்றை கூட்டில் வைப்பது போல் அடைத்து, பத்திரிகையாளர்களுக்குக் காட்டி அவமானப்படுத்துவதாக நினைத்தது பெரு அரசு. ஆனால் அவரோ தனது ஆதரவாளர்களுக்கு "மக்கள் புரட்சி வெல்லும்", "தொடர்ந்து போராடுங்கள்" என செய்தி விடுத்ததோடு சர்வதேச சோஷலிச புரட்சிக் கீதத்தையும் பாடி உற்சாகமாகக் காணப்பட்டார். தோழர் குஸ்மான் உற்சாகமாகக் காணப்பட்டாலும், அவரின் உயிருக்கு எந்த நேரமும், எதுவும் நடக்கலாம் என முதலாளித்துவப் பத்திரிகைகளே எழுதுமளவிற்கு பெருவின் சர்வாதிகார அரசின் நடைமுறை உள்ளது. "தப்பியோட முயற்சித்த போது சுடப்பட்டார்", "சுகயீனம் காரணமாக இறந்தார்", என செய்திகள் வரலாம் என முதலாளித்துவ பத்திரிகைகள் எச்சரிக்கை விடுத்தன. இவரின் கைதைத் தொடர்ந்து உலகெங்குமுள்ள மார்க்சிய-லெனினிய ஆதரவாளர்கள், அவரை விடுதலை செய்யும்படி ஆர்ப்பாட்டங்கள் நடாத்தினர்.

நூற்றுக்கணக்கான வருடங்களாக ஏகாதிபத்தியங்களால் சுரண்டிப் பிழியப்பட்ட பெரு மக்களை ஏகாதிபத்திய நாசகாரிடமிருந்து விடுவிக்கவும், மக்கள் விடுதலையடையவும் போராடிவரும் மார்க்சிய-லெனினிய-மாஓ சிந்தனைவாத கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், பெரு நாட்டின் வறிய, ஏழை விவசாய, தொழிலாள மக்களின் தலைவராக அங்கீகாரம் பெற்றவரான தோழர் அபிமெல் குஸ்மான் தனது விடாப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிடியான, வளைந்து கொடுக்காத புரட்சிகர சிந்தனையால் ஓர் கம்யூனிச எதிர்காலத்தை ஏகாதிபத்திய, கொடூர வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கத் தனது பணியைச் சிறப்பாக ஆற்றியுள்ளார். அவர் ஏகாதிபத்தியவாதிகளினதும், ஒடுக்குமுறையாளர்களினதும், உலகைத் தமது இரத்தக் கறை பிடித்த ஆட்சியால் தமது வர்க்கத்தைப் பாதுகாக்க நினைப்பவர்களின் "**முதல் அரசியல் எதிரி**"யாக கருதப்படுகின்றார். ஏகாதிபத்தியங்களுக்கு ஏதோ ஒரு வகையில் சேவை செய்பவர்களையே "சிறந்த கெரில்லா தலைவர்" என பாராட்டுகின்றன ஏகாதிபத்தியங்களும், அவர்களின் எடுபிடிகளும்.

பெருவிற்கு வெளியே, உலகம் தழுவிய ரீதியில் முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான பலலட்சம் மக்கள் தோழர் அபிமைல் குஸ்மானையும், அவரது அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட யுத்தத்தையும் சுதந்திரத்திற்கானது என ஆதரிக்கின்றனர். தோழர் குஸ்மான் அரசியல் ரீதியாகவும், கருத்து ரீதியாகவும் ஆழ்ந்த புரட்சிவீரர்களை பெருவின் விவசாயிகள், தொழிலாளர்கள், அறிவுஜீவிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார். அதனூடே ஆயுதப் போராட்ட வெற்றி மூலம் தளப்பிரதேசங்களை உருவாக்கியுள்ளார்.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின் படி தோழர் அபிமைல் குஸ்மானின் வக்கீலும், மற்றும் அவரை நியாயமாக நடாத்தப்பட வேண்டும் எனக் கோரும் 'ஜனநாயக சட்டநிபுணர்கள்" குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்களும் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை அனுபவிப்பதாகவும், 10.10.1992 லிருந்து குஸ்மானை அவரது குடும்ப அங்கத்தவர்கள் கூட பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. பெரு பாசிச அரசும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் அவரை ஏற்கனவே கொலை செய்திருக்கக்கூடும் என செய்திகள் கூறுகின்றன.


தோழர் குஸ்மானின் உயிருக்கு ஆபத்து வராமல் இருக்க குரல் கொடுப்பதென்பது அடிமைகள் கிளர்ச்சி செய்வதற்குள்ள உரிமைக்கு ஒப்பானதாகும். இவரின் கைது தொடர்பாக கண்டனம் தெரிவிப்பவர்கள் எழுத வேண்டிய முகவரி.

PRESIDENT ALBERTO FUJIMORI
PRESIDENTE DE LA REBUBLICA
PALACIO DE GOBIERNO
PLAZA DE ARMAS
LIMA-1
PERU



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிவா

www.tamilarangam.net

# நோய்... மெய்... பிணி.... காடு....

நாமே முடுக்கிய கடிகாரத்துடன்
நாமே பறந்து ஓடி..... ஓடி....
நாமே இச்சமைத்த கவலைகளை
நாமே கிழித்து..... கிழித்து....

ஓடிய கால்களும்
ஆடிய வாழ்வும்
அமைதிக்கு வந்தது

பள்ளி தந்த பாடங்கள்
வாழ்க்கை தந்த அனுபவங்கள்
விஞ்ஞானங்கள் தந்த நோய்கள்
தேடிச் சேர்த்த சொத்துக்கள்
இழந்து விட்ட இன்பங்கள்
தீர்ந்து விட்ட சந்தர்ப்பங்கள்.....

அத்தனையும் சேர்த்து ஈசிச்செயரில் சாய்கிறது
அவசரமாய் அள்ளி உடைந்தவற்றை
ஆறுதலாய் இரைமீட்டுப் பார்க்கிறது.

எந்த வாழ்க்கையிலுமே எவர்க்கும் முழு வெற்றியில்லை
எந்த சிலேற்மட்டையிலும் எந்நேரம் கீறல் விழத்தான்
செய்கிறது

www.tamilarangam.net

அழகிய முகங்களில் ஆங்காங்கே காலத்தின் கோடுகள்
ஆம்
அவை சுரிக் கோடுகள்.

கோடுபோட்ட வாழ்க்கை போய் - காலக்
கோடுகளில் வாழ்க்கை தள்ளாடி அசைகிறது
மெல்ல மெல்ல அசைகிறது - அது
மௌனமாய் வழி விடுகிறது.

பழுத்த மரத்துக்கு கல்லெறிவது போல
இன்னும் பல பல நோய்கள்....

கான்சராய்....
ஹை பிரஷராய்...
ஹாட் அட்டாக்காய்...

வாழ்க்கை வலியிருந்து
ஈசிச் செயரில் சாய்கிறது.

பாரத்தை சுமந்த தோள்கள் எல்லாம்
தேசத்தின் பாரங்களை இறக்க வழி தேடித்... தேடி...
காலம் எட்டி உதைக்க - அக்
காலன் வரவு பார்த்து.... பார்த்து....
ஈசிச் செயரில் முடங்கிறது
முகட்டைப் பார்த்து ஏதோ கதைக்கிறது.

வாழ்வின் இனிமைகள் அன்று தெரிகிறது
இந்த மாறுபக்கத்தில் மனம் குமுறுகிறது.

இழக்கவும் ஏதுமில்லை,
சாதிக்க எதுவுமில்லை,
உறங்கு நிலை வித்தைப் போல - இன்று
அடுத்த பயணத்திற்கான ஆயத்தங்கள்

ஆம்,

www.tamilarangam.net

இருட்டினுள் சங்கமிக்க
அந்திக்காலம் தன்னைத் தாயர்ப்படுத்துகிறது
ஒளி உடலை விட்டுப் போகிறது
தன் உலகை விட்டுப் போகிறது.

ஏ.சிச்செயர் மட்டும் அதே இடத்தில்.

உலகம்!
அது உலகளாவிய மானுடம் பற்றி அதிகம்
அலட்டிக் கொண்டு வாழ்கிறது.... (?).

(தொடர் நவீனம் முற்றுப் பெறுகிறது.)

(44 பக்கத் தொடர்ச்சி)

வெளிவரும் சஞ்சிகைகள் தங்கள் வேலைமுறைகளை வாசகர்களை இனங்கண்டு முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையின் சமூக,விஞ்ஞானப் போக்கானது சூரியமல்லி இயக்க காலத்தில் 'மலேரியா நோய்'க்கு எதிராக, சமூகத்தின் பல வர்க்கத்தட்டுக்களின் நல்லெண்ணம் கொண்டவர்களை இணைத்து வேலை செய்தது போல், இன்றும் தமிழ்த் தேசியத் தலைமையை பிரதிபலிக்கும் புலிகளின் நடவடிக்கைகளினால், மரணபயத்தால் மௌனிகளாக்கப்பட்டுள்ள மக்களையும், முற்போக்கு எண்ணங்கொண்ட நேர்மையான சக்திகளையும் ஒன்று சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள சக்திகளிற்கு தீப்பொறி, N.L.F.T., P.L.F.T., பேரவை போன்றவர்களின் அழிப்பு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

'தேசிய சக்தி' என்று அறிக்கைவிட்டு புலிகளை ஆதரித்தாலும், மார்க்ஸிய கருத்துடையவர்கள் தமிழ்த் தேசியத் தலைமையின் எதிரிகளே என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. இந்த உண்மைகளை விளங்கிக்கொண்டு, இன்று மேலைநாடுகளில் வாழ்கின்ற நேர்மையான சமூக, விஞ்ஞானப் போக்குடையவர்களை முதல் வேலையாக அணிதிரட்ட வேண்டும். இந் நடவடிக்கை மிகவும் கடினமானது. இதைத் தனித் தொரு பத்திரிகை செய்ய முடியாது. எனவே வெளிநாடுகளில் வெளிவரும் பத்திரிகைகளில் ஒருமைப்பாட்டுக்குள் வரக்கூடியவை ஒன்றுகூடி பொது வேலைமுறை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

- சாந்தன்

www.tamilarangam.net

# யார் தவறு ?

பூவிழந்து பொட்டிழந்து!
புன்சிரிப்பு தானிழந்து!
கட்டியவன் துணையிழந்து!
கண் வடிக்கும் நீருடனே
பெற்றெடுத்த பிள்ளைகட்காய்
நொந்த உள்ளத்துடன்
நாளிலொன்று ஒரு நிலையிலே
நாதியின்றி நிற்கும் அன்னை – இவள்

தவிக்கும் தன் பிள்ளைக்கு
தண்ணீர்க்கு வழி இன்றி
பசிக்கும் வயிற்றுக்கு...
பசித்திருக்கும் உணவின்றி
பிள்ளை மனம் துடிக்கின்றாள்
அவள் கண்ணீர் வடிக்கின்றாள்
இவள் வடிக்கும் கண்ணீரோ
இவள் மடிப் பிள்ளை பட்டு
அவன் உடல் நனைகிறது
அன்னையின் மனம் துடிக்கிறது

தாயருகில் அமர்ந்திருக்கும், அவள்
தலைமகன் ஓர் விழியால்
தாயையும் தம்பியையும்
தன்னருகில் காண்கின்றான்
தன் உள்ளத்தில் பதிக்கின்றான்
தன்னையே மறக்கின்றான்
தன் பணியைத் தொடர்ந்து



இவ்வாறு கடந்து போக
கோணாமல் சென்றும் வழி
இன்னலுக்கு இலக்கானது
இதற் கொண்டதால் என்றிருந்து
ஏ.கே. வாங்கத் தேவை
ஏன் தூக்க மாட்டான்
தூக்கினால் அவன் தவறா? இவளை
தூக்க வைத்தோர் தவறா?

வேலணையூர்-பொன்னண்ணா

www.tamilarangam.net

# விட்டு விடுதலையாகி...

நோர்வேயிலிருந்து
ம.அருள்நேசன்

"எட தம்பி எழும்படா மோனே ..... வெள்ளாப்பாகப் போகுதடா .... எழும்படா மோனே!" என மகனை எழுப்பினார் கதிரவேலு.

"என்ன விடியக்காலத்தாலே போய் பொடியை எழுப்பிக் கொண்டு நிக்கிறியள் .... அவன் பள்ளிக்குப் போறவன். ஏன் நாகராசா வரமாட்டானாமே?, அவனோட தானே வல பருக்கப் போனனீங்க", என்றவாறு கணவனுக்கு தேனீரை வழங்கினாள் பரமேஸ்வரி.

"நான் என்னடி செய்ய, ராத்திரி முழுக்க எங்கேயோ போய் கள்ளு குடிச்சிட்டு இப்பதான் இதால சத்தம் போட்டுக் கொண்டு போறான் ..... ம் ... இன்னைடக்குத் தனியத்தான்." என்று மனைவியிடம் கூறியபடி தேனீர்க் குவளையை கொடுத்துவிட்டு முற்றத்திற்கு வந்தார்.

வாடைக்காற்று உடலை வருடிச் சென்றது. விடிவெள்ளி காரித்து நிலவு பட்டுக் கொண்டிருக்க கிழக்கு சிவந்து கொண்டிருந்தது. ஆங்காங்கே குருவிகளின் கீச்சிடலும், தொழிலுக்குச் செல்ல நண்பர்களை எழுப்பும் அதட்டல் ஒலியும் கேட்கக் கூடியதாய் இருந்தது.

முற்றத்துக்கு வந்த கதிரவேலு தோளில் கிடந்த துண்டை உதறி தலையில் கட்டிக் கொண்டு வேலியோரமாய் அடுக்கி வைக்கப் பட்டிருந்த பட்டை, பறி, பாயணிகளை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு நடக்கலானார்.

கதிரவேலுவின் பரம்பரைச் சொத்தான ஒரு பழைய மரத்தோணியும், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் கடனாக வாங்கிய பத்து வலைகளையும்

www.tamilarangam.net

நம்பியே அவரும், அவரின் குடும்பமும் காலம் தள்ளியவண்ணமிருக்கின்றனர். கதிரவேலுவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவள் வாணி, ஊர் வழமைக் கேற்ப மூன்றாம் வகுப்புப்படிக்கும் போதே "பொட்டை படிச்சென்ன பிரயோசனம்" என்று தாய்க்கு வீட்டு வேலையில் உதவுவதற்காக பாடசாலையிலிருந்து மறிக்கப்பட்டு விட்டாள்.

அடுத்தது நந்தன். ஊரையடுத்துள்ள கல்லூரி ஒன்றில் A/L முதல் வருடம் படித்துக் கொண்டிருக்கிறான். கல்வி வாசனை தலைகாட்டத் தொடங்கியிருக்கும் அந்த 'மீன்பிடிக் கிராமத்தில்' முதன் முதலாக A/L படித்துக் கொண்டிருக்கும் மாணவன் நந்தன் தான். குடும்பம் கஸ்டத்தில் உழன்றாலும் தாய் பரமேஸ்வரி மகனின் படிப்பிற்கு அத்தனை வசதிகளும் செய்து கொடுத்திருந்தாள்.

வழமை போல் ஒருநாள் பாடசாலை சென்ற நந்தன் வீடு திரும்பவில்லை. எல்லா இடங்களிலும் விசாரித்து இறுதியில் நந்தனின் நண்பர்கள் மூலம் அவன் வீடு திரும்பாத காரணத்தைக் குடும்பத்தினர் தெரிந்து கொண்டனர். மகனின் செயலால் ஏற்பட்ட ஆத்திரத்தில் வீட்டு முற்றத்தில் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார் கதிரவேலு.

"எடியே எல்லாம் உன்னாலதானடி நடந்தது.... ஏதோ பெரிய நினைப்பில பள்ளிக்கனுப்பினவளவை, நான் கடலடிச்ச காச கரியாக்கி படிக்க வச்சாய் .... பாத்தியேடி என்ன நடந்ததெண்டு! இண்டைக்கு அவனோட்ட பொடியள் ரெண்டு, மூண்டு குமரக் கரை சேத்திட்டு புள்ளகுட்டியோட இருக்கிறன்கள். அப்பன், ஆத்தைக்கு உழைச்சுக்குடுத்து, அக்கா, தங்கச்சிய வாழ்விக்கிற கடமையைச் செய்ய முடியாததெல்லாம் இயக்கத்துக்குப் போய், நாடு பிடிக்கப் போறான்களாம் ....... முதுகெலும்பில்லாததுகள். நான் எத்தின தரம் கடலுக்குப் போக அவனைக் கூப்பிட்டனனான். நீதானே அவன் படிக்கிற பிள்ளையெண்டு மறிச்சனி..... இப்ப அழுதென்னடி பிரயோசனம் ......" தனது கவலை தீர பழி அனைத்தும் மனைவி மீது திணித்து மனச் சாந்தி தேடிக் கொள்ள முயன்றார் கதிரவேலு.

மாதங்கள் சென்றன. கோடை மாறி மாரியின் வரவால் எங்கும் பச்சைப் பசேலென புற்கள் காட்சியளித்தன. இடையிடையே வளர்ந்திருந்த காளான் குடைகள் அழகுக்கு அழகு சேர்த்தன. வாடைப் பெயர்ச்சியில் ஏற்பட்ட பெருமழையால் சிறு பள்ளங்களும், குழிகளும் நீர் நிரம்பி தாங்களும் பாரிய நீர்த்தேக்கங்கள் என வெய்யிலில் பளபளப்புக் காட்டின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பருவமழையால் வந்த சூழல் மாற்றம் போல் ஈழவிடுதலைப் போராட்ட சக்திகளின் திடீர் வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்கள் அந்த மீன் பிடிக் கிராமத்தையும் விட்டு வைக்கவில்லை. முன்பு ஊரில் செத்தவீடு, கலியாணவீடு போன்ற ஏதாவது முக்கிய விடயங்களின் போது மட்டும் காணக் கூடியதாகவிருந்த வாகனங்களை ஊருக்குள் அடிக்கடி காணக் கூடியதாகவிருந்தது. முன்பு இளைஞர்கள் தலைமறைவாகினர். இப்போ யுவதிகளும் ஏழாம், எட்டாம் வகுப்பு படிக்கும் சிறுவர்களும் கூட திடீர், திடீர் என காணாமல் போயினர்.

ஆரம்பத்தில் ஏதோ பெரிய விடயமாக நினைத்து, அந்தக் கிராமமக்கள் காணாமல் போவோரைத் தேடினர். காலப் போக்கில் அவ்வாறு தேடுவதில்லை. ஏனெனில் காணாமற் போனவர்கள் ஆயுதங்கள் சகிதம் மோட்டார் வாகனத்திலோ, அல்லது மோட்டார் சைக்கிள்களி-லோ இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின் திரும்பிவருவர் என்பதை எல்லோரும் அறிந்திருந்தனர்.

— x — x —

இரவு தொழிலுக்குச் சென்ற களைப்பில் கதிரவேலு வெளித் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தார். மனைவியும், மகளும் அடுப்-படியில் சமைத்துக் கொண்டிருந்தனர். மோட்டார் சைக்கிள் ஒன்று படலையடியில் வந்து நின்றது. வாணி வெளியே வந்து பார்த்தாள். படலையைத் திறந்து நந்தன் வந்து கொண்டிருந்தான். முகத்துக்குப் பொருந்தாத தாடியுடன் பெரிய சேட்டு அணிந்து, தலைமயிரை வெட்டி இருந்திருந்தான். போதும் போதும் அரும்பு மீசையும், அரைக் காற்சட்டை-யுடனும் சென்றவன், ஆறுமாத இடைவெளியில் நிறையவே மாறியிரு-ந்தான்.

அசோக் மாஸ்டர் என்றால் அப்பகுதியில் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. நந்தனை அவனது இயக்கத்தினர் அப்படித்தான் அழைப்பார்கள். அசோக் மாஸ்டர் என்ற நந்தனுடன் பலரும் நட்புக் கொள்ள விரும்பினர். நகரத்திலுள்ள ஸ்தாபன உரிமையாளர்களும், பெட்டிக் கடை காரர்களும் வலிய அழைத்துத் தங்களால் முடிந்தது என்று தாங்கள் ஆதரவை வழங்கினர். விசுவாசம் மிக்க தோழரும், மதிப்பளித்து கௌரவிக்கும் மக்களும் ஒத்துழைக்க, அவன் பொறுப்-பாளனாய் நியமிக்கப்பட்ட அப்பகுதியை, அந்த அமைப்பின் 'கோட்டை' என மற்றவர்கள் சொல்லுமளவுக்குத் தன் பணியை செவ்வனே செய்தான்.

இயக்கவேலை காரணமாக வீட்டுக்கு நீண்ட காலமாக வராமல் இருந்த நந்தன், அருகிலிருந்த ஊரில் இரு சாதியினருக்குள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏற்பட்ட கலவரத்தைத் தீர்த்து வைத்துவிட்டு வீட்டுக்கு வந்தான். வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை. களைப்பாக இருந்ததால் வெளித்திண்ணையில் கிடந்த பாயில் படுத்தான். படலை திறக்கும் சத்தம் கேட்டது.



படலையைத் திறந்து கொண்டு ரோகிணி வந்தாள். அவள் புரட்சிகர முன்னணி ஒன்றின், பெண்விடுதலைக்குப் பெண்களை அணி-திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறாள்.

"நான் வாணி..... வாணியிட்ட வந்தனான்"..... தயங்கியபடி வினவினாள் ரோகிணி. "வீட்டில ஒருத்தரையும் காணயில்ல...? தங்கச்சியாக்-கள் போயிருப்பினம் என்டு நினைக்கிறன், இப்ப வந்திடுவினம்" என்றவாறு பாயை விட்டெழுந்து அவளை அமருமாறு கூறினான். ரோகிணி பாயில் இருந்து கொள்ள அவன் எதிர்த்திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

இருவரிடையேயும் சிறிது நேர அமைதி நிலவியது. பின்பு நந்தன் தயங்கியபடி ஊர் நிலைமைகள் பற்றி உரையாடலைத் தொடங்கி-னான். அது பின் நாட்டு நிலைமை, அரசியல், இயக்கங்களின் செயற்பாடுகள் பற்றித் திரும்பியது.

"நந்தன் இப்ப கொஞ்சக்காலம் உங்கட இயக்கத்தைப் பற்றி

www.tamilarangam.net

கன கதையள் அடிபடுது ....... எல்லாம் உண்மையே ?"......

"அப்போ இந்த கோவில் ..... நகைக்கடைப்பிரச்சனை தானே ?.... அது பற்றி எங்கட இயக்கம் மறுப்பு நோட்டீஸ் விட்டிருக்கிறமே ..... அதில்லாட்டாலும் இந்தக் கோவில்களில் தேவையில்லாமல் இவ்வளவு நகைகளும் பொருள்களும் இருந்தென்ன பிரயோசனம்"..... அலட்சியமாகப் பதிலளித்தான் நந்தன்.

"ஓம், கோயிலும், சமய சம்பிரதாயங்களும் பிரயோசனமில்லாதவைதான், பிற்போக்கானவை தான், நானும் ஒத்துக் கொள்கிறேன்.

புரட்சிகர மார்க்சிய-லெனினிய கண்ணோட்டத்தில இவையெல்லாம் சமூகத்திலிருந்து தூக்கியெறியப்பட வேண்டியது தான். ஆனாலும் எமது மக்கள் இன்னும் வர்க்கப் போராட்டத்திற்கு தயார்படுத்தப்படவில்லை. எங்கட சமூகம் சம்பிரதாயங்களைக் கட்டிக் காக்கிற மத்தியதரவர்க்கத்தை பெரும்பான்மையாக உள்ளடக்கிய சூழ்நிலைகளைக்கொண்டதாகவிருந்து வருகிறது.

இந்த நிலையில் கோவில்களைக் கொள்ளையடிப்பதும், சமய சம்பிரதாயங்களுக்கெதிராக மக்களைத் தயார்படுத்தலாம் என பிரச்சாரம் செய்வதும், எங்களை மக்களிடமிருந்து அன்னியப்படுத்தலாம்"....

"ரோகினி! நீங்களும், மற்றொரு சில அமைப்புகளும், தத்துவம், கொள்கை, வர்க்கப் போராட்டத்திற்கு சனங்களை ஆயத்தப்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டு சாப்பாடுப் பாசல் வாங்கித் தின்று கொண்டு திரியிறியள்......... கனவு காணவேண்டியது தான்!"

"அப்பிடியெண்டால் மக்களை போராட்டத்திற்குத் தயார்ப்படுத்தாமல், வெறும் ஆயுதங்களை வைச்சே விடுதலையைப் பெற்றிடலாம் எண்டு நினைக்கிறீங்களா ?.."

"இண்டைக்கு எங்கட அமைப்புக்கும், இன்னொரு இயக்கத்துக்கும் தான் இலங்கை அரசு பெருவாரி பயப்படுது. மக்களும் எங்களைப் பற்றித்தான் அடிக்கடி பேசிக் கொள்ளுகினம். காரணம் என்னெண்டு நினைக்கிறியள். நாங்க செய்யிற தாக்குதல்கள் தான். நாங்களும் எங்கட மிதவாத தலைவர்கள் போல தமிழீழம், தமிழீழம் எண்டு வெறும் வாய்ச் சவுடால் விட்டுக் கொண்டிருந்தால் எப்படி?.. போராட்டம் எண்டு வந்திட்டா மக்கள் சூழ்நிலைக்கேற்ப மாறுவினம். அதுக்கேற்ப அணிதிரட்டி ஆயுதம் செய்யிறதெண்டால், எங்கட எல்லையளில ராணுவத்தைப் பயப்படுத்திருவாங்கள். அதால மக்களும் எங்களை புரிந்து கொண்டு மாறிக் கொள்ளுவினம்....."

www.tamilarangam.net

நந்தன்! நீங்க சொல்லுற மாதிரி மக்கள் போராட்டத்திற்கு அணி திரட்டாமல், வெறும் ஆயுதங்களையே நம்பி இப்ப நடக்கிற மாதிரி குழு ரீதியாக போராட்டம் தொடருமானால்.....

அதாவது.... இண்டைக்கு மக்கள் நமக்கு மரியாதை தாறாங்க. விடுதலைவீரர்கள் என்றும், ஈழத்தை அவையளுக்கு எவ்வித இழப்புமில்லாமல் சும்மாயிருக்க "பொடியள்" மீட்டுத்தரப் போற மீட்பர்கள் என்றும் நம்பிக் கொண்டிருக்கினம். அதோட இப்ப இயக்கங்களுக்கு இளைஞர்களும், மாணவ, மாணவியரும் போய்க்கொண்டிருக்கினம். எல்லா குழுக்களும் போட்டி போட்டுக் கொண்டு வாலில ஏத்துகினம். எங்கட போராட்டம் வளர்ச்சியடைகிறதுக்குப் பதிலாக வீங்கிக் கொண்டு போற தன்மை காணப்படுகிறது. இதற்குக் காரணம் ஆயுதமும், அதன் கவர்ச்சியில ஏற்பட்ட "ஹீரோயிச" எண்ணங்களும் தான் காரணம். அதோட இப்பிடி பிரிவாகப் பிளவுபட்டுள்ள இந்தக் கால கட்டத்திலே மக்களிடையே ஏற்படுகிற பிரச்சனைகளுக்கு அமைப்புகள் வழங்கும் தீர்ப்பை மக்கள் ஏற்றுக் கொள்ளுகினம். இவையள் லைட் போஸ்றில் கட்டிறதையும், மொட்டையடிக்கிறதையும் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், ஆயுதங்களுக்குப் பயந்து எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கினம்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், இப்ப நடக்கிற சகோதரப் படுகொலைகள், தொடர்ந்து ஒரு அமைப்பை இன்னொரு அமைப்பு அழிக்கும் நிலையிலே, பின் சர்வதேச சக்திகளினால் இயக்கங்கள் நிராயுதபாணியாக்கப்படும் போது, இன்று ஆயுதங்களுட தைரியத்தில குழுக்களா இருக்கும் போது நாங்க செய்யிற தவறுகளுக்கெல்லாம் நிராயுதபாணியான நிலையில், ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டி வரும். அரசியல் இல்லாமல் வெறும் திருட்டு துப்பாக்கிய நம்பி இப்படியே தொடருமெண்டால் விடுதலைப் போராட்டப் பாதை மாறிவிடும். அதனால மக்களை அணிதிரட்டி போராட்டத்தை மக்கள் போராட்டமாகச் செய்ய வேண்டியது இண்டைக்கு முக்கியமாக இருக்கு! ரோகிணியின் நீண்ட விளக்கத்தை எதிர்த்து நந்தனால் எதிர்வாதம் செய்ய முடியவில்லை. இருவரிடையே நீண்ட அமைதி நிலவியது.

1986 சகோதரப் படுகொலைகளின் உச்சக்கட்டம், வெறிபிடித்த மிருகம், ஆடு, மாடு, பிராணிகளைக் கொன்று, பின் மனிதரையும் தாக்குவது போல், பகைமையில் வைத்து பலி கொள்வதில் தொடங்கிய அவர்களின் இரத்தவெறி 'களையெடுப்பு' என்ற பெயரில் படுகொலை செய்வதில் வந்து முடிந்தது. விடுதலைக் காளிக்கு வெறி கொண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிருகம் ஈழத்தாயின் புதல்வரின் இரத்தத்தால் அபிசேகம் செய்ததோடு, அவர்களை எரித்த ஒளியால் ஆராதனையும் செய்தது. போட்டுக் கொழுத்திய வாகனச் சக்கரம் போதாததால், எரிந்தும் எரியாமல், காகமும், நாய்களும் சூழ்ந்தபடி, வெடிவைத்து தகர்த்ததால் மரக்கொம்புகளில் தொங்கியபடி போராளிகளின் உடல்கள். பிணம் தின்னி மிருகத்தின் வெறியாட்டம் விலங்கொடிக்கப் புறப்பட்ட ஈழத்தாயின் புதல்வியரையும் விட்டு வைக்கவில்லை. என்ன இருந்தாலும் பெண்ணைத் தெய்வமாக மதிக்கும் சமூகமாயிற்றே! உயிர் நீத்த உடல்களை புதர் மறைவில் புதைத்து, தன் முகமூடியை பாதுகாக்கவே மிருகம் அப்படிச் செய்தது.

அன்று விசுவாசம் நிறைந்த தோழர்கள், எப்போதும் இடையில் மறைந்திருந்த கைத்துப்பாக்கி, கட்டளை நிறைவேற்றக் காத்திருந்த பல பெரிய மனிதர்கள், விழுந்து வணங்காத குறையாய் மதிப்பளித்த ஊர் மக்கள் எல்லாம் இழந்த நிலையில், நந்தன் இன்று தனியனாய், நிஜங்கள் என்று நினைத்ததெல்லாம் வெறும் பகற் கனவாய் போய்விட்டதால் ஏற்பட்ட தனிய சூழலில் அனாதரவாகி விட்டான். அவனது நண்பர்கள் கொல்லப்பட்டனர். பலர் தலைமறைவாயினர். அமைப்பு தடை செய்யப்பட்டது. மயிரிழையில் உயிர்தப்பிய அவன், வெறியர் பார்வைக்குள் அடங்காத அமைப்பொன்றின் செல்வாக்குப் பிரதேசமான தனது சொந்த கிராமத்துக்கு, மிருகத்தின் வெறியாட்டம் ஓய்ந்த சிலநாட்களில் வந்து சேர்ந்தான்.

அவன் வீதியால் செல்லும் போது, ஊரவர் அவனைப் பரிதாபமாகவும், அலட்சியமாகவும் நோக்கினர். சில நாட்களுக்கு முன் இதே வீதி அவன் மோட்டார் சைக்கிளில் பவனி வந்த போது ஒதுங்கி நின்று மதிப்பளித்த ஊரார், இன்று அவனை ஒரு பொருட்டாக மதிக்காதது வெகுவாக அவனைப் பாதித்தது. பல நாட்கள் சிந்தனை செய்தான். எதிர்காலம் பற்றிய பயம் ஏற்பட்டது. பலர் செய்வதைப் போல் நாட்டைவிட்டு வெளியேறுவதானால் பணம் தேவை, அதற்கு இலேசில் பொருளாதாரம் இடம் தராது. வேறுவழிகள் அவனுக்குத் தோன்றவில்லை. பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காது தப்பியோடிப் பயனில்லை, நியாயமான அணியில் முகம் கொடுப்போம் என இறுதியில் ஓர் முடிவுக்கு வந்தான்.

தவறணையால் வந்த களைப்பில் திண்ணையில் படுத்திருந்த கதிரவேலர் வலை படுக்க போவதற்காக வழமையான நேரத்திற்கு

www.tamilarangam.net

கண்விழித்தார். தேனீர் காத்திருந்தது.

"எப்படி பரமேசு..... ஒரு புதுமை தெரியுமே.... உன்ர மோன் என்ன செய்யிறானெண்டு போய்ப் பாருங்கோ...."

"எனக்கு இண்டைக்குக் காலமையே சொல்லிட்டான்.... இனி எங்கேயும் போக மாட்டானாம்..... என்ன வந்தாலும் இங்கே இருக்கிறதா முடிவு பண்ணிட்டானாம், ..... என்ன இருந்தாலும் அவன் என்ர மோனாச்சே ...." மனைவியிடம் தேனீர் கோப்பையைக் கொடுத்துவிட்டு பாயணிகளை எடுத்து தோளில் வைத்துக்கொண்டு முன்னே நடந்தார் கதிரவேலர். மீதி வலைகளையும், சாப்பாட்டுப் பையையும் சுமந்த வண்ணம் பின் தொடர்ந்தான் நந்தன். அவன் மனதில் புத்துணர்ச்சி, புதுவேகம். பொழுது இன்னும் படவில்லை. செம்பருதி மேற்கில் இன்னும் செவ்வொளி வீசியபடி.

"ஐயோ என்ர ராசா..... என்ன பெத்த ஐயா..... என்னைவிட்டுப் போனியேடா..... ஐயோ என்ர மோனே ...." தலையடித்துக் குளறியபடி பரமேஸ்வரி உணருக்கு வடக்கே இருந்த வயலை நோக்கி ஓடினாள். அவள் பின்னே ஊரே திரண்டு ஓடியது.

வயல் வெளியின் நடுவில் இருந்த புளியமரத்தடியில் நந்தன் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தான். ஓர் அமைப்பைச் சேர்ந்த இளைஞர் சிலர் இறந்த உடலருகே நின்று எவரையும் அருகே செல்லவிடாது தடுத்துக்கொண்டனர். விடயம் அந்த சிலர், முன்பு நந்தன் இயக்கத்தில் இருந்த போது சாதிக் கலவரத்துக்குக் காரணமாயிருந்த, உயர் சாதி என்று சொல்லப்பட்ட சிலரைத் தண்டித்தானாம். அதனால் சாதித்திமிர் கொண்டவர்கள்தான் நந்தனை கொன்றிருப்பர் என்று பேசிக் கொண்டனர்.

வேறுசிலர் புளியமரத்தடி இரத்தக்காட்டேறி தான் பலியெடுத்திருக்கலாம் என ரகசியமாக தங்களுக்குள் பேசிக்கொண்டனர். பரமேஸ்வரியின் அழுகைக்குரலும், ஒப்பாரியும் எல்லோரையும் நிசப்தப்படுத்தி எங்கும் ஒலித்தது.

முற்றும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

இல : 19



சஞ்சீவியின் குறுக்கெழுத்துப் போட்டியாளர்களுக்கு;

போட்டியின் முன்பு போலல்லாது தற்போது போட்டியாளர்கள் கலந்து கொள்வது குறைந்துள்ளதனை, எமக்குக் கிடைக்கும் போட்டியின் அஞ்சல். அதன் வருகை எண்ணிக்கையின் வீதாசாரம் காட்டுகின்றது. போட்டியில் கலந்து கொள்வோர் பூர்த்தி செய்த போட்டிக்கான அஞ்சல் தாளினை எமக்கு அனுப்பிவைப்பதுடன். போட்டிபற்றிய உங்கள் கருத்துக்களையும் தெரிவியுங்கள். உங்கள் கருத்துக்களை அறிந்தே எளிமை, புதுமை செய்யலாம்.

குறுக்கெழுத்துப் போட்டிக்கான பரிசில்களாக கவிதைத்தொகுப்பு, சிறுவர்களுக்கான நூல்கள், பிற சஞ்சிகை இதழ்கள் என்ற வகையில் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சஞ்சீவியால் அனுப்பிவைக்கப்படும்.

போட்டியில் கலந்துகொண்டவர்களில், பரிசுகள் பெற்றவர்களில் சிலரது பரிசில்கள் எமக்கு திரும்பிவந்துள்ளது. இதற்கு பலரது முகவரிகளின்மையும் காரணமாயுள்ளது. சரியான முகவரியை எமக்கு அனுப்பிவைத்து உங்களுக்குரிய பரிசில்களை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சஞ்சீவி உங்கள் கைகளுக்கு உரிய காலத்தில் கிடைத்ததும் 15 நாட்களுக்குள் வெட்டுத்தாளை அனுப்பிவையுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சமூக முன்னோட்டமும்

# முற்போக்காளர்களும்

*ஆன்மீகத்தில் வெளியான இக்கட்டுரையானது இன்றைய அவசியம் கருதி சஞ்சிகையில் பிரசுரிக்கின்றோம்.*

மனித சமூகம் பல மாற்றங்களினூடாக வளர்ந்து வந்துள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை. எனது சமூக அரசியல் அறிவுக்கெட்டியபடி "முற்போக்காளர்கள்" என்று சொல்லப்படுபவர்கள் சாதாரண மனித குண இயல்புகளுக்குத் தகுந்தாற்போல் ஒரு மரபு போக்குடையவர்களாகவே உள்ளனர். இவர்களில் விரல் மடித்து எண்ணக்கூடியவர்கள் சமூக அரசியல் போக்குகளை மிக அவதானமாக அணுகினாலும், ஒரு சூழ்நிலைப் போக்குக்குள் சிக்கிச் சீரழிந்ததே வரலாறு.

ஒரு இளைஞன் சிறு வயதில் தாய், தந்தையருடன் கோவில், குளம் என்று சென்று, பதினாறு வயதில் நாஸ்திகம் பேசிப் பின்பு, மார்க்ஸியம் பேசி தான் வாழும் சூழலில் தன்னை ஒரு மனிதனாக நிறுத்தப் பல தடைகளையும் தாண்டி 'ஒருவழி' அறிவுப் போக்கில் வளர்ச்சியடைகிறான். அந்த இளைஞன் அவன் சார்ந்த குடும்பப் பொருளாதாரத்தில் தங்கி நின்றே தனது அரசியலைப் பேசும்போது, உடல் உழைப்பில் இருந்து அந்நியப்பட்ட ஒரு சமூக அரசியல் போக்கு நீடிப்பது பெரும்பாலும் அசாத்தியமானது. ஆனால் மூளை உழைப்பாளிகள் ஊதியத்துடன் உழைத்தால் இப் போக்கு நீடிக்கும்.

இருப்பினும் இவர்கள் சொந்த (அக) அனுபவமின்றி வெளி அனுபவங்களைத் தொகுப்பதன் மூலம் சமூக உண்மைகளின் உணர்வுகளு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டன் ஒட்டுவதில்லை. சில "புத்திஜீவிகள்" மேற்கூறிய அனுபவத்தை மிகவும் பெறுமதி வாய்ந்த உண்மை என்று நம்பி நடப்பார்கள். அவர்களும் ஒரு சமூக அரசியல் மாற்றத்தின்போது சலிப்படைந்து பழைய சமூக குண இயல்புகளுக்குப் பலியானதே நாம் கண்கூடாகக் கண்ட உண்மை.

75ஆம் ஆண்டுகளில் பல்கலைக் கழக மாணவர்களின் தொகையில் கணிசமானவர்கள் மார்க்ஸியம் பேசினர். இத் தத்துவமானது தர்க்க ரீதியிலும் சரி, வர்க்க ரீதியிலும் சரி உண்மைகளைக் கொண்டதும், மற்றவர்களால் நிராகரிக்க கஷ்டமானதும் என்ற அடிப்படையில் ஒரு நடைமுறை வேலையற்ற பல்கலைக்கழகக் கால ஸ்ரைலாக இது இருந்தது.

இக் காலகட்டத்தில் சீன, ரஷ்ய வண்ணக் கலர்களிலான அழகிய விளம்பரங்களுடன் கூடிய புத்தகங்கள் விற்பனையானதும், அதன் தாள்களில் உறை போடுவதும் அன்றைய காலகட்ட பாடசாலைகளின் மதிப்பான விசயமாகவும் மாறின. இந்தப் போக்கானது ஆய்வற்ற தன்மையால் ஒருவகையான ஏஜென்டுகள் போன்ற தன்மைக்குள் இவர்களை இட்டுச் சென்றது என்றுதான் சொல்லவேண்டும்.

இது பொதுவான போக்காக இருந்தாலும் ஸ்தாபனமாக இயங்கிய " முற்போக்காளர்களும்" தேசிய இனப்பிரச்சினையில் எந்தளவிற்கு நம்பிக்கை கொண்டிருந்தனர், சமூக வர்க்க முரண்பாடுகள், தேசிய இனங்களின் முரண்பாடுகள் பற்றி அக்கறை கொண்டிருந்தனர் என்பவை கேள்விக் குறியாகக்கூட இருக்கவில்லை. ரஷ்ய சார்பு "முற்போக்காளர்கள்" இலங்கைப் பாராளுமன்றவாதிகளாக இருந்தனர். சீனச் சார்பு "முற்போக்காளர்கள்" பாராளுமன்றத்தை நிராகரித்து, தேசியப் பிரச்சினை சாதியம் மட்டுமே என்றிருந்தனர். இவர்களின் இந்தப் போக்கானது நான் முன்பு கூறிய மாதிரியே சமூக உண்மைகளின் உணர்வுகளை பிரதிபலிக்காத தன்மையைத்தான் காட்டியது.

இது இவ்வாறிருக்க, தமது பிரச்சினையே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை என்ற கோட்பாட்டுக்குள்ளிருந்த த.வி.கூ. வின் அரசியல் போக்கு சந்தர்ப்பவாதப் போக்காகும். அவர்களின் வர்க்கக் குணாம்சம் காரணமாக - சாதியப் பிரச்சினையை நடைமுறையில் கடைப்பிடித்துக்கொண்டு சாதியம் என்றொரு சாமான் இல்லை என்று சொன்னதைப்போல - தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தமிழீழம் என்றனர்.

இந்த எதிரும் புதிருமான போக்குகள் நிலவியபோதும், இலங்கையரசின் இனவொடுக்கல், இனவழிப்பு, பிரதேச கபளீகரம் ஆகிய வேலைகளும் அதே காலகட்டத்தில் நடந்ததை எவரும் மறுக்க முடியாது. இந்த இனவொடுக்கு முறைக்கும், இனவொழிப்புக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராகப் போராட வந்த தமிழ் இளைஞர்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி தமது அடியாட்களாக கூட்டணி வைத்திருந்தது. இந்நிலையில் சீனச் சார்பு "முற்போக்காளர்களின்" நடவடிக்கைகள் இந்த இளைஞர்களை மிகவும் ஆத்திரப்படுத்தியது. சுயேட்சை வேட்பாளர்களை துரோகிகள் என்று அழித்த காலகட்டமும் இதுதான்.

சிறிதுகால இடைவெளியில் த.வி.கூ தலைமைகளில் வெறுப்படைந்த இளைஞர்கள் தமது சொந்தப் போக்கில் ஸ்தாபனம் அமைத்துக் கொண்டனர். தமிழீழம், ஈழம் போன்ற போக்கானது எல்லாவிதமான சிந்தனையாளர்களையும் உள்வாங்கக்கூடிய ஒரு தனித்தன்மையைக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் மனப்பாடம் பண்ணப்பட்டிருந்த சமூக விஞ்ஞானம் இந்தக் காலகட்டத்தில் சமூகத்துடன் இணையத் தொடங்கியது. இருப்பினும் தமிழ் இயக்கத் தலைமைகள் த.வி.கூ.வை நிராகரித்தனர். ஆனால் இந்திய அரசை ஏற்றுக்கொண்டனர்.

தலைமைகள் தமது இருப்பை இந்தியாவில் அமைத்துக்கொண்டிருந்தமையினால் தளநிலைமைகளை அதிசயக் கதைகள் போலக் கேட்டனர். தள இளைஞர்களோ முற்போக்குச் சிந்தனையில் நம்பிக்கை இழக்காவிடினும் "முற்போக்காளரின்" போக்கில் நம்பிக்கை இழந்திருந்தனர்.

தமிழரசுக் கட்சி தனது கடந்த காலப் போராட்டத்தைப் பேசி பேசிக் கூட்டணியாகும்வரை உயிர் வாழ்ந்தது. அதுபோல் அறுபதுகளில் சாதியப் போராட்டத்தின் வெற்றிகளை வீர முழக்கமிட்டுக் கொண்டு சீனத் தலைமைகள் மாவோவின் இறப்புவரை உயிர் வாழ்ந்தனர்.

இவர்கள் மத்தியில் காணப்பட்ட பிழைப்புவாதப்போக்கானது உடைவை இவர்களுக்குள் ஏற்படுத்தியது. தத்துவம் சார்ந்த போக்கு இவர்களிடம் கூடவே இருந்த போதும், அந்தத் தத்துவம் சமூகத்துடன் இணையாது தனித்து நின்ற போது உயர் சமூகத்திலிருந்து வந்த இளைஞர்களிடம் புதிய ஆயுதப் புழக்கம் சாதாரண விசயம் ஆகிவிட்டது. பல இளைஞர்களின் தலைமறைவு வாழ்க்கையும் தொடரத் தொடங்கிவிட்டது. இதன் காரணமாக பழைய பாணியிலான சாதியப் போராட்டம் செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாகியது. இதே வேளை தாழ்த்தப்பட்ட-ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்களின் பகுதியிலிருந்து நிறைய இளைஞர்கள் தமிழ்த் தேசிய அலையில் இழுபட்டனர். எனினும் "முற்போக்குப்" பேசியவர்கள் பல உலகநாடுகளை உதாரணங்களாகக் கூறி தமிழீழம்/ஈழம் சாத்தியமற்றது என்றே கூறினர். இப்போதும் கூறுகின்றனர்.

80களின் பின்பு தமிழீழம் சாத்தியமில்லை என்ற குரல் எழவே வாய்ப்பு இருக்கவில்லை. இந்தியா

www.tamilarangam.net

வின் வரவின்போதும், அதன் முன்பும் தேசியத் தலைமைக்கான குத்துவெட்டுகள் நடக்கத் தொடங்கிய வேளையே தமிழ்த் தேசியப் போக்கானது ஆயுதம் தாங்கிய அடக்குமுறைப் போக்குக்குள் பிரவேசித்தது. இக் காலகட்டத்தில் சமூக உண்மைகளின் உணர்வுகளைப் பிரதிபலித்த "முற்போக்குச்" சிந்தனையாளர்கள் - தமிழ்த் தேசியப் போக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் - கருத்துச் சுதந்திரம் இன்றி விழித்தனர். ஒதுங்கவும், வெளியேறவும் செய்தனர்.

இது தவிர, சமூக விஞ்ஞானப் போக்குடைய பல சிறிய அமைப்புகள் சுயமாக இயங்கியபோதும் இவர்களுக்கு இந்திய உதவி மற்றைய அமைப்புகளுக்கு கிடைத்தது போல் கிடைக்கவில்லை. இந்திய அரசின் நோக்கங்களுக்கு இரையாக மறுத்ததும் இச் சிறிய அமைப்புகள் வளரமுடியாமைக்குக் காரணம் என்று சொல்வதே சரியென நினைக்கின்றேன்.

80களுக்கு முன்னும், பின்னும் தமிழ் இயக்கங்களிலிருந்து விலகிய சமூக விஞ்ஞானக் கண்ணோட்டம் உள்ளவர்கள் புதிய அமைப்புகளை உருவாக்க இயக்கங்கள் ஒருபோதும் அனுமதித்ததில்லை. இந்த விடயத்தில் எல்லாத் தமிழ் இயக்கங்களுக்கும் ஒரு உடன்பாடிருந்தது.

90இல் தமிழீழம் என்ற போக்குடையவர்கள் ஈழம் என்ற போக்குடையவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமையும் தெரிந்ததே. தற்போது கொழும்பில் அரசியல் கடைகளை இலங்கையரசின் உதவியுடன் அமைத்துள்ளவர்களில் நான் முன்பு கூறிய "முற்போக்காளர்களும்" அடங்குவர். கடந்த காலத்தில் இந்தியாவில் இந்த இயக்கங்கள் இருந்தபோது பேசித் தீர்க்க முடியாத விடயங்களா கொழும்பில் பேசித் தீர்ப்பதற்கு? அல்லது இப்போதும் தமது தனித்துவத்தைக் காக்கச் சாகும் வரை தம்மை மார்க்ஸிஸ்டுகள் என்று கூறிக்கொள்வார்களா? என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

80களுக்கு முன்னும், பின்னும் வெளிநாடுகளுக்கு வந்த "முற்போக்காளர்கள்" பலவிதமான குழுக்களில் ஆதரவாளர்கள், அங்கத்தவர்களாயிருந்தவர்கள். பலரும் தாம் நாட்டைவிட்டு வெளிக்கிட்ட காலகட்டத்திலிருந்த குழுக்களின் இருப்பையே கொண்டுள்ளனர். சண்டை நாட்டில் நடக்கவேண்டும் என்பதில் மற்றைய தமிழர்களினின்றும் வேறுபட்டாலும், தமிழின ஒடுக்குமுறையாலும், அழிப்பினாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்றே அரசியல் தஞ்சத்திற்கான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளபோதும், சாதாரண வாக்குவாதங்களில் மரபுவாதிகளின் கிளிப்பிள்ளைத்தனத்தைக் காணக்கூடியதாயிருக்கிறது. இந்த "முற்போக்காளர்கள்" உலக அரங்கின் அரசியல் மாற்றங்களிலிருந்து பல படிப்பினைகளைக் கற்கவேண்டும் என்று சொல்லுபவர்கள். அந்த

www.tamilarangam.net

நாடுகளின் தேசிய இனப்பிரச்சினை களின் முக்கியத்துவங்கள் பற்றி பேசுபவர்கள் ஏன் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருந் தார்கள் என்பதைச் சற்றுச் சிந்தி க்க வேண்டும். பிழைப்புவாதிகள் தங்கள் சொந்த நலன்களுக்கு ஒரு போதும் தீங்காக நடக்க மாட்டார் கள். இந்த விசயத்தில் இவர்கள் அறிவாளிகளே!

*வெளிநாடுகளில் வாழும் இலக்கிய கர்த்தாக்கள்:*

இவர்களின் தன்மைகள் விள ங்கிக்கொள்ள முடியாததல்ல. ஓடு கிற வெள்ளத்தில் முன்னுக்கு நின்று தம்மைப் பிரபலப்படுத்து பவர்கள் அந்த வெள்ளம் அடங்கி யவுடன் ஒரு கரையில் ஒதுக்கப் படுபவர். இவர்களை விட்டுவிட் டுப் பார்த்தால் -

1). பழைய இருப்பை மட்டும் வைத்து இலக்கியம் படைப்பது.
2). புலி எதிர்ப்பை மட்டும் வெளிப்படுத்துவது.
3). பொதுவாக எல்லா விசயங் களையும் விமர்சிப்பதுடன் நின்று விடுவது.
4). பொதுவாக எல்லா விசயங் களையும் விமர்சிப்பதுடன் புதிய மார்க்கம் ஒன்றை தேடுவதில் தம்மையும் இணைத்துக் கொள்வது.

இவற்றில் நான்காவது வகுப் பினரே இன்றைய தேவையை உணர்ந்தவர்கள். இவர்களை மேல் மூன்று பகுதியினரும் ஏற் றுக்கொள்வதில்லை. மேல் மூன்று பகுதியினருமே இன்று எழுத்தா ளர்கள் என்ற அந்தஸ்து பெற்ற வர்களாக இருப்பது இன்றைய துரதிஷ்டம். இருப்பினும் நாலா வது பகுதியினரின் உண்மைகள் மூன்று பகுதியினரையும் சற்றுச் சிந்திக்க வைக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. முதலாவது, இரண்டாவது பகுதியினர் ஆமை வேகப் போக்குடையவர்கள். இவ ர்கள் ஒரு விசயத்தை விளங்கிக் கொள்ளும்போது அந்த விசயம் நடந்துமுடிந்து பல வருடங்கள் சென்றுவிடும். ஆனால் பழைய இருப்பைக் கொண்டவர்கள் நவீன பந்தங்களும், திரட்டுகளும் வெளி யிடுவர். இதன் மூலம் அந்தப் பழைய இயங்கியலற்றவர்களுக்கு தீனி போடுவதுமே இவர்களின் பங்களிப்பாக இருக்க முடியும்.

இன்று ஒரு புதிய பாதை பற் றியும், அதற்கான ஆய்வுகள் பற் றியும் செய்ய வேண்டிய வேலை யை உணர்ந்து அதன் வழியில் செல்லும் சஞ்சிகைகள் ஒரு முக் கியமான பாத்திரத்தை வகிக்கின் றன. இந்தச் சஞ்சிகைகளில் தமிழ் இயக்கங்களின் தவறுகள், அராஜகப் போக்குகள், மனித உரிமை மீறல்... இவை பற்றித் தனது கருத்தையும், ஏனையோ ரின் கருத்துகளையும் வெளியிட்டு காலத்தின் தேவையை உணர்ந்து

தொடர்ச்சி பக்: 27



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நினைவில் என்றும் பூக்கும்

உன் பார்வையின்
அர்த்தம்
புரிந்த போதுதான்
என் இதயம்
களவாடப் பட்டு விட்டதென்று
உண்மையே
தெரிந்தது!

உன்னைச் சந்தித்த
பின்பு தான்
உணர்ந்தேன்.
என் வாழ்விலும்
வசந்தம்
வீசுமென்று!

எம் காதலுக்கு
சமாதி கட்ட
முனைவோரும்
எதிரிகளுக்கு
[illegible] வைப்போம்
இது
புனைவொழிப் போன
புதுநிலா
வின்று!

— [illegible] அலோசியஸ்

www.tamilarangam.net



வழமையான துருதுருப்பையும், உதடுகளிலும், கண்களி-
லும் இருக்கும் ஏளப்பூச்சையும் இன்று காணவில்லை.
கண்களில் இருக்கும் ஒளிமின்னல் பட்டுப் போய் இரு-
ந்தது

யாருமே எதிர்பார்க்காத அமைதி;

'இவளுக்கு அமைதியென்றால் என்னவென்றே தெரி-
யாதாக்கும்' என நினைத்திருந்த அவளது அந்த அமை
தி அதிர்ச்சியான ஆச்சரியம் தான்!

HVAD SIGER ? HVOR FOR...? கேட்டு வகுப்பை
குழப்பும் அவள் ஏன் இன்று இப்படி?

வெளிநாட்டவர்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்ட வகுப்பு
அது. அகதிகளாய் வந்தவர்களும் தொழில் தேடி
வந்தவர்களும் என... இருபது மாணவர்கள்.

கவீனா... ஆம். அதுவே அவள் பெயர்.

அகதியான அவள் இரண்டு குழந்தைகளின் தாய்.
கணவரும் இங்கேதான் ஸ்கூலில் படித்துக்

www.tamilarangam.net

கொண்டிருப்பதாகக் கூறி இருக்கின்றாள்.
தன் நாட்டுக் கலாச்சாரம் மொழியானதை மூட்டைகட்டி விட்டு அசல் டெனிஸ்க் காரியாகவே வாழத் தொடங்கிய அவளுடன் அந்த வகுப்பில் இருக்கும் அவள் நாட்டுக் காரர் யாரும் கதைப்பதில்லை.
அதற்காக அவள் வருந்திக் கொண்டதாகவும் இல்லை.
"தன் கணவருக்கு தன் போக்குப் பிடிக்கவில்லை." எனச் சாதாரணமாகக் கூறிக் கொள்வாள்.

வகுப்பில் நேர் இருக்கை அவளுடையது; அவள் ஒரு நல்ல சிநேகிதியாகப் பழகுவாள் மனதில் பட்டதை கட்டென்று கூறும் அவள் இன்று இப்படி பிடித்த பிள்ளையார் மாதிரி ஏன் இருக்க வேண்டும்? அவள் புத்தகங்களுடன் லைட்டரும், சிகரெட்டும் கூடவே மேசையில் கிடக்கும்.

---

உதயபாரதி

---

அரைமணித்தியாலம் ஒருக்கால் RYGE PAUSE எடுக்கும் அவள்......!
அவள் மௌனிப்பு விசித்திரமானதே.
ஒரு முறை குழந்தைகளைப் பற்றிக் கதைக்கும் போது "உன்னைப் போல் தான்" அவர்கள் என்பாள். கண்கள் அகல விரியும்.
சராசரித் தாய்க்குள்ள பெருமை அது.
TOVE வின் வகுப்பு வழமையாக சித்திரை வரும்.
குரல் தெளிவில்லாமல் மெல்லப் பேசுவாள். இன்றும் அப்படியே. எல்லோரும் வகுப்பில் இருந்தாலும், சிந்தனை வழமையாய் வேறு எங்கோ தான் அலைந்திருக்கும்.

PAUSE விட அரைமணித்தியாலத்திற்கு மேல் இருந்தது.
சரியான புழுக்கம். TOVE இன் அனுமதியுடன் ஜன்னலைத் திறந்தேன். வெளிக் காற்று உள்ளே வர சந்தோசம் இருக்கத் தான் செய்தது.
மூச்சு விடுவது இலகுவாய் இருந்தது.

வகுப்பை இடம் மாற்றுங்கள் என எத்தனை தடவை முறையிட்டாலும் கேட்பதைக் காணோம்.
அதுவரைக்கும் இது போதுமாம் என நினைத்திருக்கலாம்.
வகுப்பு முடிந்த மூன்றாம் உலக நாடுகளின் குழ-ந்தைகளின் படங்களை திரும்ப போட்டு வைத்திருக்-தார்கள்.
உடுப்பில்லாமல், உணவில்லாமல், நோய் நொடிக்கு ஆளாகி.....
இது தான் உங்கள் நிலை..... என்று கூறுவது போல் தோன்றி, நீ, யாரும் போடவில்லை, யார் போடுவது என்று தோன்றாட.
PAUSE இற்கு எப்படியாவது கலாவைக் கேட்டு விட வேண்டும்.
மணிக் கூட்டைப் பார்த்துக் கொண்டேன்.
வகுப்பில் இருந்து பார்க்க, ஜன்னலினால் வெளியில் யார் போகின்றார்கள், எனத் தெரியும். சோனியா வகுப்பிற்கு வராமல் நடந்து போவது தெரிந்தது.
பொழுது போக்க நல்ல இடம்.
நேற்று பாபரா எல்லோரிடமும் ஐந்து குரோனர் படி சேர்த்தவள்.
மொனிகா இற்கு இன்று பிறந்த நாள்.
அவளைக் கொண்டு கேக் வெட்டிய பின் நூறு குரோனருக்கு சமமான பரிசு கொடுப்போம்.
அந்த வகுப்புத் தொடங்க எனக்குப் பிறந்த நாள் முடிந்து போச்சு. நான் கவலையோடு தான் காசு கொ-டுக்கிறனான். ஒவ்வொரு முறையும் கொடுக்காமல் விட்டா எதும் நினைப்பார்களோ என்ற பயம்.
TOVE இற்கு சந்தேகம் போலும்.
“கலாவுக்கு வருத்தமோ” எனக் கேட்கிறாள்.
இல்லை. களைப்பு என்றேன்.
என் பக்கத்திலிருக்கும் அவள் நாட்டுக்காரன் களைப்-புக்குக் காரணமும் சொன்னவாம் இருக்கும் என அவள் காதில் ரகசியமாய்க் கூறும் போது ரொம்பவும் கோச.

www.tamilarangam.net

கையாக்கப்பட்டது.
"பேசாமல் இரு" எனச் சைகையால் காட்டி, TOVEஐப் பார்க்கப் போகின்றேன்.

PAUSE நேரம்.
சலீனாவை அணுகினேன். கோட் போட்டு தயாராய் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.
எங்களிருவருக்கும் பொதுவான மொழி டெனிஸில் "அமைதி" பற்றி விசாரித்தேன்.
கொஞ்ச நேரம் நீடித்த அமைதி;
அவளிருந்து பிறந்த நீண்ட கோபம் ஒரு "மிரட்" இழக்கிறாள்.
நேற்று அப்துல்லா (கணவன் பெயர் சொல்லியே அழைப்பாள்) அவருக்கும் தனக்கும் சண்டையாம்.
"தனது டெனிஸ் நண்பர்களை அப்துல்லா அவமதித்து விட்டாராம்."
"ஆண் டெனிஸ் நண்பனை அப்துல்லா அழைத்ததுமில்லாமல் தனக்கும் அடித்தாராம்."
நீ என்ன செய்தாய்? ஏன் அப்படி அப்துல்லா நடக்க வேணும்?
சலீனா இயல்பாகவே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.
"நான் வீட்டில் FEST ஒன்று செய்தேன். எல்லோரும் குடித்து டான்ஸ் ஆடினோம். நேரம் இரவு ஒரு மணி. அப்துல்லாவுக்கு பொறுக்கேல்ல அது தான் பிரச்சினை.
அப்துல்லாவிலே பிழையென்ன இருக்கு? திருமணமானவள் இரண்டு பேரை வைத்துக் கொண்டு நீ இப்படி நடக்கலாமா..?
சலீனா தொடர்ந்தாள். இந்த கோபமும் அவள் மெதுவ.
"விருப்பம் இல்லாவிட்டால் போகலாமாம். தன் சொந்த சுதந்திரத்தைக் கெடுக்க வேண்டாம்."
இவளுக்கு நான் என்ன பதிலைச் சொல்ல.
"அப்துல்லா இப்ப HOSPITAL இல்"? அவளே தொடர்ந்தாள்.

நேற்றைய சம்பவத்தால் ஆளுக்கு மயக்கம் போட்டு விடவேண்டிய நிலைமை வந்திருச்சு. நான் தான் AMBULANCE இற்கு அடித்து அனுப்பினேன்."

எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

அவள் எதையும் கேட்கக் கூடியதாய் இல்லை. கேட்கவும் மாட்டாள்.

அடுத்த நாள் களைப்பில் இருந்தாள்.

பழைய சுவீனா வாகவே!

தானாகவே வந்து "டெனிஸ் நண்பன் ஒருவன் வீட்டில் இருக்கப் போவதாகவும் பிள்ளைகளும் தன்னுடனே இருக்கும் என்றாள்.

விரைவில் அப்துல்லாவை விலக்கி அந்த டெனிஸ்க்கார நண்பனை விவாகம் செய்யப் போவதாகவும் கூறி மகிழ்ச்சியில் திளைத்தாள்.

இப்போ அப்துல்லா"...? — நான்

HOSPITAL இல் கோமா நிலையில்" சுவீனா.

— முற்றும் —

---

## அந்த அம்மையார்!

## [illegible]!



ஸ்வெட்லானா அலிலூயேவா (கஷ்டப்பட்டு உச்சரியுங்கள்— ரஷ்யப் பெயர் அப்படித்தான் இருக்கும்). 1967'ல் ரஷ்யாவை விட்டு இந்தியாவுக்கு வந்தார். பிறகு அமெரிக்காவுக்குப் போனார். மூன்று திரு-

மணங்கள், மூன்று குழந்தைகள். கொஞ்ச நாள் அமெரிக்காவில் இருந்தார். பிறகு ஐந்து வருடத்துக்கு முன்பு ரஷ்யாவுக்குத் திரும்பினார். பிறகு மறுபடியும் வெளியேறி இங்கிலாந்துக்கு வந்தார். நடுவில் இரண்டு புத்தகங்கள் எழுதினார். பிரமாதமாக விற்பனையாயிற்று. அதில் வந்த பணமெல்லாம் எங்கே போயிற்றென்றே தெரியவில்லை. லண்டனில் ஒரு மூலையில், இக்கற்ற மகளிருக்காக நடத்தப்படும் விடுதியில் பணம் கொடுத்துத் தங்கிக் கொண்டிருக்கிறார்.

விடுதியில் மற்றப் பெண்களைப் போலவே இவரும் கூட்டுகிறார், சமையல் செய்கிறார், கடைகண்ணிக்குப் போகிறார். பெயர்கூட மாறிவிட்டது: லானா பீட்டர்ஸ் என்று.

வயது 66.

யார் இந்த அம்மையார்?

ஸ்டாலினின் மகள்.

—ஆர.

www.tamilarangam.net

# கம்யூனிசத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டதா?

துங்கதுபன்

1953ல் தலைவர் ஸ்டாலினது மறைவைத் தொடர்ந்து கட்சியையும், ஆட்சியையும் குருசேவ்-பிரஸ்னேவ் கும்பல் ஆட்சிக்கவிழ்ப்பின் மூலம் 1956ல் கைப்பற்றியது. இவர்கள் ஸ்டாலின் சம்பந்தப்பட்ட அனைத்தையும் அகற்றினர். ஸ்டாலினைத் "கொலைகாரன்", "சர்வாதிகாரி" என்று அவதூறு கூறி மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் முன்வைத்த 'பாட்டாளி சர்வாதிகார அரசு' என்பதற்குப் பதிலாக "முழு மக்களினதும் அரசு", "சோசலிசத்திற்குச் சமாதானமாற்றம்" என்ற தமது திரிபுவாதக் கொள்கையை முன்வைத்தனர். அணுவாயுதத்தை வேறு காரணம் காட்டி "மீண்டும் உலகப் போர் மூண்டால் உலகே அழிந்துவிடும், ஆகவே சமாதானமே முக்கியம்" (வர்க்கப் போராட்டமல்ல.) என்று கூறி தமது கொள்கைக்கு "சமாதான சகவாழ்வு" என்று பெயருமிட்டனர். உண்மையில் இக் கொள்கை முதலாளித்துவத்திற்கு சாதகமானது தான். இக்கும்பல் சோசலிசக் கூட்டுப் பண்ணைகளை நீக்கி முதலாளித்துவ சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தினர். சோசலிச விவசாயத் திட்டத்தை அதிகாரவர்க்கப் பாணியிலானது, தேவையற்றது எனத் தாக்கி, அமெரிக்கப் பெரும் பண்ணைகளிலிருந்து கற்பதாகக் கூறிக் கொண்டு முதலாளித்துவத்தை ஊக்கப்படுத்தியது. புரட்சிகர அணிகளையும், மார்க்சிய-லெனினிய-வாதிகளையும் கட்சியிலிருந்து களை எடுத்தது.

இம் மாபெரும் பாதைமாற்றத்தால் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பெரும் கருத்து மோதல்கள் எழுந்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் யூனியனைக் கடுமையாக விமர்சித்து ஆட்சியாளர்களை "புதிய திரிபுவாதிகள்" என வர்ணித்தது. இதன் மூலம் 1962ல் கம்யூனிச இயக்கம் பிளவுண்டது. சோவியத் யூனியனின் பாதையை, கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், கியூபாவும் ஏற்றுத் தடம் புரண்டன. உலகெங்குமுள்ள கம்யூனிசக் கட்சிகளும் பிளவுண்டு போனது. அவற்றில் ஒரு பகுதியினர் சோவியத் யூனியனின் ஆதரவாளர்களாகவும், மறு பகுதியினர் சீனாவின் ஆதரவாளர்களாகவும் மாறினர். சோவியத் யூனியனை விமர்சித்த நாடுகளில் சீனாவும், அல்பேனியாவும் குறிப்பிட்டளவு பங்கை ஆற்றின. சீனாவையும், அல்பேனியாவையும் தங்கள் எதிரிகளாக சோவியத் யூனியன் கருதியது.

கடந்த காலங்களில் ஸ்டாலினைத் தங்கள் தலைவராக ஏற்றிப் போற்றிய கிழக்கு ஐரோப்பிய ஆட்சியாளர்கள், ஸ்டாலினை குருசேவ் தாக்கி, அவதூறு செய்த போது எவ்வித விமர்சனமுமின்றி குருசேவைத் தாங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவராக ஏற்றனர். இவர்களின் சந்தர்ப்பவாதம் பற்றி தலைவர் மாஓ பின்வருமாறு கூறினார்.

"எனது கணிப்பீட்டின்படி இந்த இருவர் மார்க்சிய-லெனினியத்தைப்பற்றி முழுமையாக விளங்கவில்லை. ஒரு சித்தாந்த செயற்பாட்டு அணுகுமுறையை அவர்கள் கொள்ளவில்லை; புரட்சிகர தார்மீக சிந்தனை அறிந்திருக்கவில்லை. மார்க்சியம்-லெனினியம் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகர தார்மீக சிந்தனையைத் தழுவி நிற்கிறது. மேலும் நீங்கள் செல்வாக்கிற்காக ஸ்டாலின் ஒன்றிணைக்கிறீர்கள் என்பதால் நீதித்துறையும் சுயநிர்ணயம் போன்று இறந்தபட்சம் சில காரணங்கள் இருக்கின்றன. ஆனால் உங்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் ஸ்டாலினை ஆதரித்ததேயில்லை என்பது போல இந்த நிலைப்பாட்டுக்கு நீங்கள் எந்தக் காரணமும் அளிக்கவில்லை; இருப்பினும் உண்மையில் நீங்கள் முழுமையாக ஆதரித்திருக்கிறீர்கள். ஸ்டாலின் பற்றிய பிரச்சனை சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதும் பொருந்தும் விஷயம்; எல்லா நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகளும் சம்பந்தப்பட்டது."

குருசேவ் - பிரஸ்னேவ் கும்பலின் தாக்குதலிலிருந்து ஸ்டாலினைப் பாதுகாத்து, ஸ்டாலினை சிறந்த மார்க்சிய-லெனினியவாதி என சீனப் பொதுவுடைமைக் கட்சி கணித்தது. மாஓ கூறினார்.

"இரண்டு வாள்கள் உண்டு என நான் கருதுகின்றேன். ஒன்று லெனின். மற்றது ஸ்டாலின். ஸ்டாலின் என்ற வாளை இழக்கிறதால், இந்தக் கதவைத் திறந்ததும் பெருமளவு லெனினிசம் வீசி எறியப்படுகின்றது."

இது இன்று நடைமுறையில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. முதலில் ஸ்டாலினின் சிலைகளைத் திரிபுவாத ஆட்சியாளர்கள் முன் நின்று உடைத்தெறிந்தனர். இப்போது அவர்களின் வாரிசுகள் லெனினின் சிலைகளையும் உடைத்துவிட்டார்கள். மாஓ கூறுகிறார்.

"சகல விதத்திலுமாகவும் மார்க்சிய லெனினியத்திலும் நின்று ஸ்டாலின் எல்லாம் சரியாக இருக்கின்றார் என்ற அதீத விசுவாசம் நாம் அவரை விடப் பெரியதாகத் தொடர்ந்து காக்க வேண்டும்."

இப்படி தோழர் ஸ்டாலினைப் பாதுகாத்த அதே வேளையில், ஸ்டாலினது தவறுகளைக் கடுமையாகவும், நேர்மையாகவும் விமர்சித்தார். அவர் கூறினார்.

"ஸ்டாலின் பெருமளவு வினையியலைக் கொண்டவராக இருந்தார். அவரைப் பின்பற்றி பலர் வினையியலை மேற்கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரெதிர்களின் போராட்டம், எதிரெதிர்களின் ஐக்கியம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள தொடர்பைக் காண ஸ்டாலின் தவறினார். சோவியத் யூனியனில் சிலர் இன்று சிந்தனையில் அதிபௌதிகவாதிகளாகவும், பிடிவாதவாதிகளாகவும் இருக்கின்றனர். ஒருமைப்பாடு இது, அல்லது அதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். எதிரெதிர்களின் ஐக்கியம் என்பதனை அறிந்து கொள்ள மறுக்கின்றனர். இதனால் அரசியல் தவறுகள் இழைக்கப்படுகின்றன. சகல துறைகளிலும் இயங்கியலை முழுமையாக பிரயோகிக்கத் தவறியமை ஸ்டாலினின் மிகவும் அடிப்படைத் தவறாகும். இதனால் அவர் சோசலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தின் இயல்பு பற்றியும் தொழிலாளர்வர்க்க ஆட்சியை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் மிகவும் தவறான முடிவுகளைப் பெற்றுக் கொண்டார். ஸ்டாலின் பழைய அரசியல் வர்க்கங்களுக்கு எதிராக உக்கிரமான போராட்டம் நடாத்திய அதே வேளையில் சோசலிச சமுதாயத்திற்குள்ளிருந்தே, கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள திரிபுவாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட அவர்கள் (கட்சியிலிருந்து) புதிய பூர்சுவா வர்க்கம் என்ற தோற்றப்பாட்டைத் தத்துவத்தில் மறுத்தார். இதனால் நாட்டின் தொழிற்துறையிலும், விவசாயத்திலும் சோசலிச உடைமை முறையை அடிப்படையில் ஸ்தாபித்ததன் விளைவாக சோவியத் யூனியனில் பகைமையான வர்க்கங்கள் அழித்தொழிக்கப்பட்டன என்று தவறாகக் கூறினார். இது போன்ற சோசலிச சமுதாயத்தை ஆராய்வதில் இயங்கியலை முழுமையாகப் பாவிக்கத் தவறியதால் சோவியத் தலைவர்கள் சோசலிசத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் இனிமேல் முரண்பாடு இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். இதனால் சோசலிசத்தில் புரட்சியை நடாத்துவதில் போதிய கவனம் செலுத்தத் தவறினார்கள். அடிப்படையில் சோசலிச உடைமை முறையை ஸ்தாபித்த பின்னரும் உற்பத்தி உறவுகளை தொடர்ந்து புரட்சிமயப்படுத்தத் தவறினார்கள். சோசலிச சமுதாயத்தின் இயல்பு பற்றிய இத்தவறான விளக்கம் காரணமாக ஸ்டாலின் மக்களுக்கும், எதிரிக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளைக் கலந்து தவறினார். இதனால் இந்த முரண்பாடுகளைக் கையாள்வதில் குறிப்பிடத்தக்க அதிகாரவர்க்க முறைகள் அனுசரிக்கப்பட்டன. இது எதிர்மறையான பல உயிரிழப்புகளை வழங்கியது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜோசப் ஸ்டாலின்

சோசலிசம் உலகில் முதன்முதல் நடைமுறைப்படுத்தப் பெரும்பங்காற்றியவர். முதலாளித்துவ, ஏகாதிபத்தியவாதிகளின் பரம எதிரியாக இருந்தவர். அதனாலேயே இவர் இன்றும் மார்க்சிய எதிர்ப்பாளரும், ஏகாதிபத்தியவாதிகளாலும் கடும் அவதூறு செய்யப்பட்டு வருகின்றார். உலகைப் பாசிசம், நாஜிசம் என்னும் கொடிய நுகத்திடமிருந்து பாதுகாத்தவர். தன் வாழ்நாள் முழுதுமே மார்க்சியம்-லெனினியத்திற்காக உழைத்த தியாகி. உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஈடுஇணையற்றதலைவர்.

மார்க்சியம் எழுதப்பட்ட காலத்திலிருந்து அதற்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகளால் 'மார்க்சியத்திற்குக் கல்லறை கட்டும்' முயற்சிகள் செய்யப்பட்டு வந்தன. அவை மார்க்ஸ், ஏங்கல்ஸ் காலத்திலும், பின் லெனின் ஸ்டாலின் காலத்திலும் நடைமுறையிலும், தத்துவத்திலும் முறியடிக்கப்பட்டன. உலகின் முதன்முதல் சோசலிசநாடான சோவியத்யூனியனின் புரட்சியின் ஆரம்பகாலங்களிலும், பின்னர் சோசலிச-மாற்றக் காலகட்டங்களிலும் கடுமையான பலவீனங்களும் காணப்பட்டே வந்தன. பாரிஸ் கம்யூனின் குறுகிய கால அனுபவம் தவிர முந்திய வரலாற்று அனுபவமின்மை, சோவியத் அரசுக்கு எதிரான கடுமையான ஏகாதிபத்திய முற்றுகை, ஆக்கிரமிப்பு ஆகியவையும் அவற்றுக்கு காரணமாயின.

மார்க்ஸியத்தின் ஆரம்பகால எதிர்ப்புகளும், பின்னர் நாஜிகளின் பிரமாண்டமான, உலகவரலாறு காணாத யுத்தம் மூலம் மார்க்சிய-லெனினியத்தை அடியோடு அழிக்கும் நோக்கம் கொண்ட யுத்தத்தில் சோவியத்யூனியனின் வெற்றியின் மூலம் சோவியத் தலைமை, 'கம்யூனிசத்தின் எதிரிகள் இதுபோன்றே வெளியிலிருந்து தான் வரும்' எனத் தவறாகக் கணித்தது.

www.tamilarangam.net

இதுவரை காலமும் மார்க்சியம் - லெனினியத்தை நேரடியாக எதிர்த்துத் தோற்றவர்கள், கம்யூனிசக் கட்சிக்குள் புகுந்து அதனைப் புகழ்ந்து கொண்டே அதனை அழிப்பதை தமது நோக்கமாகக் கொண்டனர். இவர்களுக்கு கம்யூனிஸ்டுகளின் தவறுகள், பலவீனங்கள் உதவின. இவர்களின் முதல் வெளிப்பாடாக குருசேவ் - பிரஸ்னேவ் கும்பலின் ஆட்சிக்கவிழ்ப்பு அமைந்தது. இக்கும்பலே 1956ல் ஹங்கேரி-யிலும், 1968 செக்கோஸ்லவாக்கியாவிலும் படையெடுத்து ஆக்கிரமிப்பா-ளர்களாக மாறினர். 1962ல் பேர்லின் சுவர் கட்டப்பட்டதும் இவர்களது காலத்திலேயே. நீண்ட காலத்தின் பின் 1979ல் ஆப்கானிஸ்தானிலும் படையெடுப்பு நடாத்தி ஆக்கிரமித்தனர். சோசலிச ரஷ்யாவை சமூகஏகாதி-பத்தியமாக்கினர்.

மார்க்சிய எதிரிகள் இவ்வாறு கட்சிக்குள் புகுவதற்கு சோவி-யத் யூனியன் பாசிசத்திற்கு எதிரான யுத்தத்தின் போது பாசிச எதிர்ப்பாள-ர்களுடன் ஒத்துழைப்பு செய்ததும், இதன் மூலம் பாசிசஎதிர்ப்பு என்ற போர்வையில் கம்யூனிச எதிர்ப்பாளர்களும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் புக வழிவகுத்தது. இது உலகம் முழுவதும் நடந்தேறியது.

இந்த அனுபவங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சி திரிபுவாதத்திற்கு எதிராக தத்துவார்த்தப் போராட்டத்தையும், அதற்கு எதிராக உலகெங்குமுள்ள உண்மையான, நேர்மையான மார்க்சிய - லெனினிய கட்சிகளை வளர்ப்பதிலும் கவனஞ் செலுத்தியது. ரஷ்யாவில் முதலாளித்துவப் பாதையாளர்கள் (குருசேவ் - பிரஸ்னேவ் கும்பல்) ஆட்சியைக் கைப்பற்றியதைப் போல் சீனாவிலும் முதலாளித்துவப் பாதையாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்-காகவும், அவர்களைக் கட்சியிலிருந்து தூக்கி எறிவதுமான கலாச்சாரப் புரட்சியை 1966ம் ஆண்டு ஆரம்பித்தது.

கலாச்சாரப் புரட்சி என்பது பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், சமுதாயத்தைப் புரட்சிமயமாக்குதல் ஆகியவற்றின் அனுபவமாகும். இது தொழிலாளர்களையும், புரட்சிகரசக்திகளையும் ஒன்றிணைப்பதுமாகும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பித்த இப்புரட்சியிலேயே பல வெற்றிகள் சீனா-வில் பெறப்பட்டன. அது கோடிக்கணக்கான தொழிலாளர்களையும், புரட்சியாளர்களையும் தமது வர்க்க உணர்வையும், மார்க்சிய - லெனினியத்-தையும் கிரகித்துக் கொள்வதையும் ஆழமாக்கியது. கலை, கல்வி,

இலக்கியம், விஞ்ஞான ஆராய்ச்சி போன்ற விடயங்களில் மகத்துவமான சோஷலிச மாற்றங்களைக் கொண்டு வந்தது. சீன கம்யூனிஸ் கட்சியில் ஜனநாயக மத்தியத்துவம், விமர்சனம், சுயவிமர்சனம் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் கட்சியை மேலும் சரியான பாதையில் செல்ல வழிவகுத்தது. பத்தாண்டு காலம் திரிபுவாதத்திற்கெதிரான போரையும் நடத்தது. ரஷ்யத் திரிபுவாதிகள் சீனக் கலாசாரப்புரட்சியை இழித்துப் பழித்தார்கள். தலைவர் மாஓவை 'கம்யூனிசத்துரோகி' என வர்ணித்தனர். தொழிலாளர்கள் மற்றும் பிற பரந்துபட்ட மக்களின் கல்வி-கலாச்சார மட்டத்தை உயர்த்துவதற்கான கலாச்சாரப் புரட்சியின் அவசியத்தை உணர்ந்து லெனின் பின்வருமாறு விளக்கினார்.

" போதுமான அளவு கலாச்சாரம் வளர்ச்சிபெறாத ஒரு நாட்டில் சோசலிசத்தை நிலைநாட்டுவதை மேற்கொள்வதில் நாம் மிகவும் அவசரப்பட்டுவிட்டோம் என்று நமது எதிரிகள் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருக்கின்றார்கள். தத்துவத்தில் — எல்லா வகை பண்டிதர்களின் தத்துவத்திலும் — குறிப்பிடப்பட்ட ஒழுங்கிற்கு நேர்மாறான முறையிலிருந்து நாம் தொடங்கியதால் அவர்கள் இத்தவறான கருத்துக்கு வருகின்றார்கள். இந்நாட்டில் அரசியல் மற்றும் சமூகப்புரட்சி கலாச்சாரப்புரட்சியை முந்திவிட்டது. ஆயினும் அந்த கலாச்சாரப்புரட்சி இப்போது நம்மை எதிர் கொள்கின்றது. "


லெனின் காட்டிய வழியில் மாஓ தலைமையில் சீனாவில் கலாச்சாரப் புரட்சி தொடக்கி வைக்கப்பட்டது. இக் கலாச்சாரப் புரட்சி குறிப்பிட்ட 10, 20 வருடங்களில் முடிந்து விடக் கூடியதல்ல. நீண்ட கால போராட்டத்தினூடே வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என மாஓ கருதினார். ஏனெனில் தனிச் சொத்துடைமை 2000 வருடங்களுக்கு மேலான அனுபவம் கொண்டது. ஆனால் சோசலிசம் ரஷ்யாவில் 35 வருட அனுபவமும், சீனாவில் மாஓவின் ஆட்சியமைப்பிலான 30 வருட அனுபவமும் கொண்டது. 2000 வருட அனுபவத்திற்கு எதிரான போராட்டம் 30, 40 வருடங்களில் முடிந்துவிடாது. அதனால் தான் தனிச் சொத்துடைமையும், முதலாளித்துவத்தையும் ஒழித்துக்கட்டுவதற்கு விடாப்பிடியான அரசியல் போராட்டத்தையும் நீண்ட காலம் கடைப்பிடிக்க வேண்டும் என சீனத் தலைமை கருதியது.

(தொடரும்)

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப் போட்டி

இல 19



உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

c:22 ,No:19

afs. ______________________

______________________

______________________

______________________

www.tamilarangam.net

# சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 u$ |
| Canada<br>Australia | 29 u$ |
| Sweden<br>Norway | 125kr. |
| Danmark | |

காசோலை அனுப்பவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்

**A/C.NO.7601-408695-3**
**Tamilsk Dansk Venskabs Forening**
**Vestjysk Bank**
**7500-Holstebro,**
**Danmark.**

காசோலை அனுப்பவேண்டிய முகவரி

**CHANCHIVE**
DANMARKSGADE - 10
**7500-HOLSTEBRO,**
**DANMARK.**

> "மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
> கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
> எல்லோரது கருத்துக்களும்,
> விமர்சனங்களுமே
> வழிவகுக்கும்."

www.tamilarangam.net

**Chanchive**
DANMARKSGADE 10
**7500 Holsterbro**
**Denmark.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்